உ

# காஞ்சிபுரம்

## கோயில்களின் விவர வழி காட்டி

இதில் ஆலய தேரிசனவிதி, வழிபாடு, சீவகாருண்ய அறிக்கை அடக்கம்.

(4-ம் பதிப்பு)



கணபதி வாசக சாலை,
92, காமாட்சி அம்மன் வீதி,
காஞ்சிபுரம்.

1949.

விலை அணு 3.

ஸ்ரீ வெங்கடேஸ்வர பிரஸ், விஷ்ணு காஞ்சி.

உ

# காஞ்சியில் உள்ள பாடல் பெற்றவும், அபிமான பிரபல தலங்களின் விபரம்.

1. திருநெறிக்காரைக்காடு (திருக்காலிமேடு) 2. யதோத்காரி (திருவெஃகா) 3. அஷ்டபுஜம் 4. மணிகண்டேசர் 5. புண்ணியகோடீசம் 6. தேவராஜப்பெருமாள் 7. குகாநரசிம்மர் 8 வலம்புரி விநாயகர் 9. சிவாத்தானம் 10. சாந்தாசயர் (சாந்தாலீசுரர்) 11. சத்ததானேசுரம் 12. வேளுக்கை (சிங்கப் பெருமாள்) 13. திருத்தண்கா (விளக்கொளி) 14. முத்தீசம் 15. பராசரேசம். வழுக்கறுத்தீசர் 16. ஆதிபதீசம் 17. பணாதரீசம் 18. சித்தீசம் 19. திரிகால ஞானேசம் 20. ஹரிசாப பயந் தீர்த்தீசம் 21. மதங்கீசம 22. வைகுண்டப் பெருமாள் 23. அமிருமீசம் 24 திருக்கார்வானம் திருக்காரகம். திருநீரகம். திருவூரகம் (உலகளந்தார் கோயில்) 25. காமக்கோட்டம், காமாட்சி அம்மன் (பராசக்தி கோயில் தனி) திருக்கள்வனூர் 26. ஐராவதீசம் 27 சித்ரகுப்தர் கோயில் 28. கச்சபேசம் 29. இஷ்டசித்தீசம் 30. அமரீசம் 31. மாசாத்தான் தளி 32. குமரகோட்டம் 33 தான்றோன்றீசம் 34. சுரகரீசம் 35 பாண்டவப்பெருமாள் 36. சவுனகீசம் 37. வன்னீசம் 38. மாண்டுகண்ணீசம் 39 காயாரோகணம் 40. திருமேற்றளி 41. தக்கீசம் 42. வன்மீக நாதர். கைலாசநாதர். அனேகதங்காவதம் 43. வயிரவீசம் 44. வாணேசம் 45 ஓணகாந்தன் தளி 46. ஜலந்தரீசம் 47. நவக்கிரகீசம். செவ்வந்தீசம். 48. இரணீசம் 49. தீர்த்தீசுரர் (சர்வதீர்த்தம்) 50. பச்சைவண்ணம் 51. பவளவண்ணம் 52. பிறவாத்தானம் 53. இறவாத்தானம் 54. மகாலிங்கத்தானம் 55. வீரட்டகாசம் 56. பாண்டவீசம் 57. மச்சீஸம் 58. நகரீசம் சாயிபாபாமடம், வீரபத்ர 59. கண்ணீசம் 60. மங்களேசுரம் 61. இராமநாதீச்சுரம் 62. மாதலீச்சுரம் 63 அனந்தபத்மநாபேசுரம் 64. திருவேகம்பம். கச்சி மயானம். அகத்தீசம் வெள்ளக்கம்பர், கள்ளக்கம்பர். மத்தளமாதேசுரர். நல்லக்கம்பர் வாலீசர், பசுவேசர். விண்டுவீசர், நிலாத்திங்கள் துண்டப் பெருமாள் 65. கங்கணீசம் 66 கடகேசம் 67. திருப்பருத்திக்குன்றம், (ஜைனர் கோயில்) மற்றும் விவரத்திற்கு காஞ்சிப் புராணம் வாங்கிப் பார்க்கவும். காஞ்சிபுர ஆலய வழிகாட்டி அ. 4.

உபந்நியாசம் செய்பவர் காலத்தில் ஆரம்பித்து, சபை மத்தியில் பீடிகை இல்லாமல் பலரும் நன்றாய் கேழ்க்க சொல்லும்படி கோரப்படுகிறது.

A. சோமசுந்தரம்,

92. கணபதி சைகல் ஒர்க்ஸ், காஞ்சிபுரம்.

சிறப்புற்ற தொண்டைநாட்டில்

# காஞ்சீபுரத்து சிவ ஆலயங்களின் விபரம்

## 1. திருநெறிக்காரைக்காடு.

**திருக்காலிமேடு** அல்லது **சத்தியவிரதம்** என்று வழங்குகிறது. ரயில் நிலயத்திற்கு தென்கிழக்கில் ½ மைலில் **சத்தியவிரதீஸ்வரர்.** மேற்கில் சத்தியவிரத அல்லது இந்திர தீர்த்தம். இந்திரபுரம் என்றும் பெயர். **புதவாரம் ஸ்நான விசேஷம்.** புதன், இந்திரன் பூசித்து பேறு பெற்றது. உமையம்மை, விநயகர், சுப்பிரமணியர்பிரபலம். **வியாழ** பகவானால் சிவி எனும் இந்திரனுக்கு சிவபெருமானே முதற்தெய்வமென வழிபடச் செய்து எல்லாப்பேறும் பிறவாவரமும் அடையச்செய்தது. தரிசித்தவர் எமபுரம் அடையார். கருவிலும் புகமாட்டார்கள். முன் காரைக் காடா யிருந்ததால் இப்பெயர்பெற்றது.

## 2. மணிகண்டீசுரர்'

சின்னகாஞ்சீபுரம் திருக்கச்சிநம்பித் தெருவில் உள்ளது, விஷத்தை கண்டத்தில் வைத்துக்கொண்டவர். **மணிகண்டநாதர்.** தேவர்கள் இறவாதிருக்க மகாவிஷ்ணுவை துணையாகக் கொண்டு அசுரர்களுடன் பாற்கடலைக் கடைந்தபோது மந்தரமலை அசையாதிருக்க தற்செயலாய் சிவபூசையின் நிமித்தம் வ்ந்த வாலி வாசுகியைப் பற்றி இழுத்தபோது விடம் தோன்றியதை சகிககமாட்டாது பிரம்மன் பொன்நிறமிழந்தும் திருமால் வெண்நிறம் நீங்

லியும், மற்றவரும் உருமாறி, நந்திதேவர் அருள்பெற்று கைலையை அடைந்து பிரார்த்தித்து, பெருமானால் அபயம் கொடுக்கப்பெற்று, விஷம் உண்ணப்பெற்றது. பாவம் நீங்க மணிகண்டநாதர் எனும் லிங்கம் தாபித்து பிரம்மா, விஷ்ணு, தேவர்கள் பூசித்து இறவாப் பேறெய்தினர். கோயிலில் மேல்புரம் **வாசுகீசர்**. தான் விடத்தைக் கக்கிய பாவம்தீர வாசுகி மாணிக்கங்களால் பூசித்து பெருநலம் பெற்றது **பணாமணீஸ்வரர்**. அனந்த தீர்த்தம். **ஐயங்கார்பாளையம்** தெருவில் காளகண்டேசுரர். மற்றும் மூர்த்திகளும் நவக்ரகமும் உண்டு.

## 3. புண்ணியகோடீசம்

ஷை௸க்கு தெற்கே அமுதுபடி தெருவிற்குப் பின். **புண்ணியகோடீசுரர்**. புண்ணியகோடி தீர்த்தம். திருமால் பிரமனைப்போல் படைபபுத் தொழிலைச் செய்ய விரும்பி தாமரை மலர்களைக்கொண்டு பூசித்தது. யானையும் பூக்கொய்து கொடுத்து தொண்டு செய்துவர தடாகத்திலிருந்த முதலை யானையின் காலைப்பற்றி இழுக்கவும், **ஆதிமூலமே** என்று அழைக்கப்பெற்று திருமால் **முதலையை** சக்கரத்தால் அழிக்கப்பெற்ற இடம். யானையின் பெயரால் அத்திகிரி என்றும் அவ்விடம் உள்ள தீர்த்தத்திற்கு பொற்றாமரை என்றும் பெயர். புண்ணியகோடி தீர்த்தத்தில் மூழ்கி, செய்யும் புண்ணியம் கோடிக் கணக்காக ஆகும். திருமால் **வரதராசர்** என்று பெயர் பெற்ற இடம். திருமால் இறைவனை மேக உருக்கொண்டு தாங்கினமையால் **மேகவாகன கற்பம்** எனப் பெயர் பெற்றது.

## 4. வலம்புரி விநாயகர்.

**அத்திகிரியில்** வரதராஜபெருமாள் கோயிலில், தென் மேல்புரம். அசுரர்களை அழிக்க தேவர்கள் வேண்டுதலி

னால் இறைவன் திருவிளையாட்டின் வழி பிரணவமாய் உற்பவித்தார். கணங்களுக்குத் தலைவராக முடிசூட்டப் பெற்றவர். திருமால்தனது **பாஞ்சசன்னிய**மென்னும் சங்கு காணாமற் போனதை முன்னிட்டு அதைப்பெறவேண்டி ஸ்தாபித்து பூசித்து, பெற்றது. பூசித்தவர் பற்றற்று சிவ போகமடைவர்.

## 5. சிவாத்தானப்பெருமான்.

ஷேடிக்கு தென்கிழக்கில் **தேளர்பாக்கத்தில்**, பிரமன் சிருஷ்டித்தொழிலை செய்ய பூசித்து சாவித்திரி, காயத்திரி என்ற மனைவிகளுடன் யாகம் செய்தது. **பிரமீசன்.** பிரம தீர்த்தம். **சரசுவதி**, பிரம்மா தன்னையன்றி யாகம் செய்ததால், பிரமன்மீது கோபித்து **வேகவதி** நதியாகி வெள்ளம் பெருக்கெடுக்க பெருமான் கட்டளைப்படி திருமால் பாம் பாகி சயனித்து மூன்றிடத்திலும் தடுத்த இடம். எதோத் காரியில் பெருமாள் பெயர் சொன்னவண்ணம் செய்தமை யால் **சொன்னவண்ணப்பெருமாள்.** நடுராத்திரியில் தீபப் பிரகாசமாய் சென்றதினால் **விளக்கொளிபெருமாள்** என்ற பெயரும் உண்டு. **பிரமேச்சுவரம்.** கிரகணம், அமாவாசை யில் ஸ்நான விசேஷம். திருமாலோடு பிரமன் உலகங் களைப் படைத்துவந்தனர். ஐந்தொழிற்கும் இறைவனே உண்மைக்காரணன் என்பதை விளக்கியது.

## 6. சார்ந்தாசயர்.

ஷேடிக்கு தென்மேற்கு பராசர் குமாரர் வியாசமுனி வர் விசுவநாதர் சந்நிதியில் **பொய்ச்சத்தியம்** செய்த துன் பம் நீங்க பூசித்தது. சின்னகாஞ்சீபுரம் சேஷாத்திரி பாளையம் சார்ந்தாசீசுவரர் கோயில் தெருவில், தென் கோடியில் உள்ளது. **நாராயணனே முதல் தெய்வம்** என்று மாறாக கைதூக்கிச்சொல்ல, நந்தி சாபமேற்றதை தவிர்க்க

HOPADHYAYA LIBRARY

பூசித்து திருமால் பிரஸன்னமாகி மற்றெல்லாரையும் நீக்கி மிகவும் தியானிக்க சிவபிரான் ஒருவரே என்று (அதர்வசி கோபநிடதம்) கூறுகின்றதை சொல்லி சரணமடையச் செய்து பெருமானால் சாபவிமோசனம் செய்வித்தது. சிவபெருமான் ஒருவரே அழியாத தெய்வம் என்பதை அறியச் செய்தது.

## 7. சத்ததானேசுரர்.

ஷை-க்கு மேற்கில் ஏழு லிங்கங்கள். பார்க்கீஸ்வரர். மஞ்சள் நதிக்கரையின் தென்பக்கம் தும்பவனம் தெரு கோடியில், காசிபர், கௌசிகர், ஆங்கிரேசர், அத்திரி, கௌதமர், பிருகு, வசிட்டர் என்னும் சப்தரிஷிகள் பூசித்தது. இறைவன் வழிபாடொன்றே எளிதில் முத்தியைத் தரும் என்னும் உண்மையை விளக்கிய இடம். புண்ணியம் சிவ புண்ணியம் பசுபுண்ணியம் என இரு வகைப்படும். எல்லாவற்றிலும் சிறந்தவை சிவ பூஜையும், அடியார் பூஜையுமே. இறைவனை வணங்குபவர்கள் வினைத்தொடர்பு நீங்கப்பெறுவார்கள்.

## 8. முத்தீசுரர்.

ஆடிசன்பேட்டை மார்க்கட்டு சமீபம். காந்தி ரோட்டில் வடபாரிசததில், காசிபமுனிவரின் அழகுள்ள மனைவி கத்துருவினால், சுபருணை சிறைபட்டதை நிவர்த்திக்க பெருமானை பூசைசெய்த இடம். திருமாலுக்கு வாகன மாகவும் இருக்க கருடன் வாக்களித்தது. இம்மையில் வரும் துன்பத்தை நீக்கிக்கொள்ளவும் பகைவரை வெல்ல வும் கூடும். கருடன் அமுதம் கொண்டுவந்து கொடுத்து தாயாரின் அடிமைத்தனத்தை நீக்கியது. ஏகாலியர் குலத் துதித்த திருக்குறிப்புத்தொண்ட நாயனர் பூசித்து முத்திபெற் றது. கருடேஸ்வரர். கருடன், கத்துருவின் புதல்வர்களா

கிய பாம்புகளைக்கொல்ல பூசித்து வரம்பெற்றது. வலி மையும் இறைவன் வழிபாட்டினால் கிடைக்கும்.

## 9. பராசரேசர்.

ஆடிசன்பேட்டையில் வழக்கறுத்தீஸ்வரர் ஆலயத்தில் தென்புறம் பராசரமுனிவர் தன் தந்தை சக்தி முனிவரைக் கொன்ற அரக்கனை அழிக்கவும், பழியை தீர்த்துக் கொள்ள இரட்சோக்கன யாகம்செய்து பூசித்து அரக்கர் களையெல்லாம் வென்றது. மஞ்சள் தீர்த்தம். இறைவனை வழிபட்டால் குறித்தவையன்றி பிறவும் கிடைக்கும்.

## 10. ஆதிபதீசுரர்.

ஷை்கு தென்மேற்கில் ஆலடிபிள்ளையார் கோயில் தெருவில் விளக்கொளி இறைவர். மஹாவிஷ்ணுபூசித்து நடுராத்திரியில் சரஸ்வதி, வேகவதி நதியாக வந்த வெள் ளத்தை சிவபெருமான் கட்டளைப்படி திருமால் தடுத்து பிரம்மயாகத்தை காப்பாற்றியது. வளத்தீஸ்வரர், விருபா க்ஷீஸ்வரர் கோயில்கள் ஷை்கு சமீபம். திருமால் முதலி யோருக்கு சிறப்புப் பெயர்களும் நினைத்தவற்றைச் செய்து முடித்தலும் இறைவன் திருவருளாலே உண்டா கும்.

## 11. பணாதரீசுரர்

ஷை் தெருவில் தென்கோடியில் வேகவதிக்கு வடக் கில், சர்ப்பங்கள் பூசித்து கருடனால் அடைந்த துக்கத்தி லிருந்து நிவர்த்திக்கப்பட்டது. சிவபெருமானால் ஆபரண மாக அணியப்பெற்று கருடனை "ஏன் கருடா சுகமா" என்று வினவியது. எப்போதும் பெரியோரை அடுத்தல் வேண் டும். தரிசித்தவர்களுக்கும் கற்றவர்கள் கேட்டவர்கட் கும் பாம்பின் விடம் அணுகாது.

## 12. சித்தீசுரர்.

ராஜாம்பேட்டைத் தெருவில் மஞ்சள்நீர் நதிக்கு வடக்கில் இறைவி கம்பாநதிக்கரையில் தவம் புரிந்தபோது மஞ்சள் காப்பணிப்து முழுகிய நீர்ப்பெருக்கு மஞ்சள் நீர்க்கால்வாயாக வரப்பெற்றது. சித்த தீர்த்தம். சித்தர்கள் பூசித்தது, சனிவாரம் ஸ்நான விசேஷம். மஞ்சள் நீர்க்கூத்தர். யோகத்தால் வரும் பெரும் சித்திகள் பலவும் இறைவன் வழிபாட்டினல் கிடைக்கும்.

## 13. திரிகால ஞானேசுரர்

முனிசிபல் மதுருந்தோட்டத்தில் கச்சேரி தெரு என்கிற கொசத்தெரு மோடார் பஸ் நிற்குமிடத்தில் திரிகாலத்தை யுமுணர முனிவர்கள் பூசித்து அருள் பெற்றது.

## 14. அரிசாப பயம்தீர்த்தீஸ்வரர்.

ஷெடிக்கு வடக்கில் நெல்லுக்காரதெரு தென்னண்டை வாடையில். தேவர் அசுரர்கள் போரில் அசுரர்களுக்கு அபயம் தந்ததன் மனைவி கியாதியை கொன்றதை முன்னிட்டு பிருகுமுனிவர் 10 பிறவி எடுக்க விஷ்ணுவுக்கு இட்டசாபம் நீங்க ஹரியினுடைய சாப பயத்தை தீர்த்த இடம். விஷ்ணு பூசித்தது. பெருமாள் ஆஸ்ரமம் ஏற்படுத்தி இருந்த இடம் ஐந்து பிறப்பு தண்டமும் ஐந்து பிறப்பு அருளும் பெற, வரம்பெற்றது. முக்கால உணர்ச்சியும் ஐம்புலன் அடக்கலும் வலிமையும் இறைவன் வழிபாட்டினல் எளிதில் கிடைக்கும்.

## 15. மதங்கீஸ்வரர்.

மதங்கமா முனி ஐம்புலன்களை வெல்ல பூசித்தது. நெல்லுக்காரத்தெரு கீழ்க்கோடியில், மிஷன் ஆஸ்பத்திரிக்கு

எதிர் வாடையிலுள்ளது. உயர்வுள்ள பிம்பம். கோயி லும் வேலைப்பாடுள்ளது. கவனிப்பவர் வேண்டும்.

## 16. அபிருமீசுவரர்.

அபிருமீசம் வாமனதீர்த்தம். மாவலியைக் கொல்ல மகாவிஷ்ணு வாமனராகி மூன்றடி மண்கேட்டு இரண் டடியால் மேல் கீழ் அளந்து மூன்றுவதால் மாவலி தலை யில் அடிவைத்து பாதாளத்தில் அழுத்திக்கொன்ற பாவம் தீர பூசித்தது. உலகளந்தார் தெருவில், சங்குபாணி விநாய கர் ஆலயத்திற்கு மேற்பக்கத்தில்

## 17. ஐராவதீசுரர்

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன் றிய ஐராவதம் என்னும் வெள்ளையானை மற்றதிக்கு யானை களுக்கு தலைமையாயிருக்கவும், இந்திரனை தாங்குவதற்கும் பூசித்து பேறு பெற்ற இடம். ஸ்ரீ கச்சபேசுவரர் கோயி லுக்கு எதிர் வடமேற்கில் உள்ளது. வணங்குபவர் பிறவி வித்தாகிய காமாதி குற்றங்களினின்றும் இறைவன் திரு வடியை அடைவார். கோயில் ஒட்டலின் எரிகரும்பு வைக்க உபயோகப்படுகிறது.

## 18. இஷ்டசித்தீசுரர்.

ஷெடிக்கு எதிரில் ஸ்ரீ கச்சபேசுரர் ஆலயத்தில். சுக் கிரன், குபேரன், சூரியன், ததீக முனிவர் முதலியவர் பூசை செய்தது. இறைவன் தீர்த்த வடிவாக உள்ள இடம். இஷ்டசித்தி தீர்த்தம். கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை ஸ்னான விசேஷம். சகல பாப நிவாரணம். வேண்டுவதை அடை வர். பிரம்மன் படைப்புத் தொழிலையும், விஷ்ணு காத்தற் தொழிலையும், உமையம்மை ஏகாம்பராது திருமேனியிற்

பாதியும் பூசைசெய்து பெற்றனர். ததீசி முனிவர் இற வாத யாக்கையையும் மிருத்தசஞ்சீவினி மந்திரத்தையும் வரப் பெற்றது. மேற்கு பார்த்த சன்னதி. பணம் கொடுத்து பார்க்கவேண்டும். கலிகால கர்மகர்த்தர்களின் கருணை.

## 19. கச்சபேசுரர்.

ஷை-க்கு தெற்கு. பிரம்மா, விஷ்ணு, துர்க்கை, சாத்தன், சூரியன், வயிரவர், கணபதி பூசித்தது. காவலும் பூண்டிருப்பதாக புராணம். மேற்கில் திருமால் பூசித்த சக்தியுள்ள சத்தியவசன விநாயகர் இருக்கிறார். கச்சபமாக திருமால் தேவர்கள் கடல் கடைந்த காலத்தில் மந்திர கிரியை தாங்கினதாலும் தேவர்களுக்கு அமுதம் பங்கிட்டதினாலும் அகங்காரம் கொண்டு ஆமை உருவெடுத்து உலகம் கலங்க கடலைகலக்கியபோது பெருமான் ஆமையை அழித்து ஓட்டை வெண்டலை மாலையில் சேர்த்துக்கொண்டது. சிவபெருமான் ஒருவரே இறுதிக் காலத்தில் எல்லாவற்றையும் அழித்து தம்மை ஒருவரும் அழிப்பவரின்றி தமது சத்தியும் தானும் தனித்து நிற்பர். முழுமுதற் கடவுள். ஸ்தல விருக்ஷம் முருக்கமரம். சோதிலிங்கம் பிரமன் பூசித்து படைத்தற்றொழிலில் தலைமை பெற்றது. வரதராசபெருமாள் உத்சவ காலத்திலும் கார்த்திகைத் திங்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கோயிலுள் பிரவேசிக்க கட்டணம் வசூல் செய்வது தருமகர்த்தரின் பெருமிதத்தை நன்கு புலப்படுத்துகிறது. கடவுளின் அருள் எவ்வாருமோ. மேல் நாட்டார் பழிக்க இடம் தருகிறது.

## 20. அமரீசுரர்.

ஷை-க்கு வடக்கில். பெரிய காஞ்சீபுரம் ராஜவீதி மேல் சந்தில் கிமந்தகார ஒத்தைவாடை தெருவில். முப்பத்து முக்கோடி தேவர்கள் பூசித்தது. திரிதேசுரர். இறைவனை

அம்மையார் வேண்டியபடி இந்திரன் உள்ளடங்கிய தேவர்கள் அசுரரை செயிக்கச்செய்த பின், தங்கள் செருக்கினல் தாங்களே அமரில் அசுரரை வென்றதாக சொன்னபோது இயக்கவடிவம்கொண்ட எம்பெருமானல் அறிவடைந்து, உமையம்மையால் கலக்கம் தீர்ந்து, பூசித்து பேறுபெற்றது. இத்தலம் இறைவனுக்கு மிக இனியதாகும். நல்ல பெருமக்கள் வாசம் செய்யும் இடத்தில் இருந்தும் கவனிப்பில்லே.

## 21. மாசாத்தான்தளி.

ஷை க்கு கிழக்கில் **ராஜவீதியில்** பங்குனி உத்திர பத்தாந் திருவிழா **வணிகர் மண்டபத்தில்.** தேவாசுரர் கடலே கடைந்தபோது உண்டான அமுதத்தை பங்கிட திருமால் எடுத்த மோகினி வடிவத்தில் இறைவன் ஈடுபட்டதின் பயனல் உண்டான ஹரிஹர புத்திரன் பூஜைசெய்து பூத கணங்களுக்கு தலைவரானது. இறைவன் திருவருள் பெற்றுச் செய்யும் செய்கைகள் நாம் கருதிய பயனேயே யன்றி வேறு பல நன்மையையும் தரும்.

## 22. ஸ்ரீ குமரகோட்டம்.

ராஜவீதியில். குமாரசுவாமி பிரமனே பிரணவத்தின் பொருளே அறியா நிமித்தம் சிறையிட்டதின் பொருட்டு ஷை சிறையிலிருந்துமீள பிரமன் பூஜைசெய்தது. தேவ சேனதிபதிக்காகவும், பெருமான் நந்திதேவரிடம் பிரமனே சிறைநீக்கச் சொல்லி அனுப்பியும் பிரமனே சிறைவிடாததின் நிமித்தமாகவும் இளேய பிள்ளேயார் பிரதிட்டை செய்து பூசித்தது. **சேனபதீசுரர். உள்ளுவார் உள்ளப் பெருமான்.** (உருகும் உள்ளத்தான்) ஆலயம் உள் பிரகாரத்தில் வடபாரிசத்தில், வஞ்சனே நீங்கவும் மார்கண்டேயரால் ஏற்பட்ட இகழ்ச்சியை ஒழிக்கவும் மகாவிஷ்ணு

பூசித்து அருள் அடைந்தது. கார்த்திகை, விசாகம், சஷ்டி, தினங்களில் பூசித்தல் நன்மை தரும். இறைவன் ஆணையை கடத்தல் பெருங்குற்றம். கோயில் தேசிகரோத்தமரால் வெகு சிரத்தையாக பார்வையிடப்படுகிறது. பரிதாபம். அரும்பொருள் வாக்கின்மூலம் சம்பாதித்து சரவணப் பொய்கை கட்டி முடிவடையாமல், கெட்ட காரியங் களுக்கு உதவிட்டிருப்பது பெரும்புண்ணியச் செயல் போலும், கட்டினவர் கவனிக்கவேண்டும்.

## 23. தான்றோன்றீசர்.

தானே தோன்றினவர். பாண்டவர், கண்ணன், உப மன்யு முனிவர் பூசித்தது. வசிஷ்டமுனிவரின் தங்கை யின் காதலர் வியாக்கிரபாத முனிவரின் குமாரரான உப மன்யு மாமன் வீட்டில் காமதேனுவின் பாலை தெவிட்ட உண்டு இருக்க, தந்தையும் தாயும் புதல்வனை தம்மில்லத் திற்கு அழைத்துச் சென்றபோது அங்கு பால் இல்லாது அரிசிமாவை கொடுத்தபோது, முனிவர் தாயின் வருத்தச் சொல்லால் தவம் செய்து ஞானமும், பாற்கடலையும் பெற் றது. பரிபூரண ஞானமும், இளமையும் தரப்பெற்ற இடம். கிருஷ்ணன் ஷை உபமன்ய முனிவரிடத்தில் தான் சிவ தீக்கை பெற்றது. விஷ்ணு பாண்டவ தூதன் என்று இறைவனை வழிபெற்ற இடம். ஏகாம்பரநாதர் சன்னதி வீதியில் உள்ளது. இம்மையில் வேண்டும் பொருள் இறைவன் வழிப்பாட்டினால் கிடைக்கும்.

## 24. ஜ்வரகரீசர்.

ஏகாம்பரநாதர் சன்னதி வீதியில். ஜ்வரகரதீர்த்தம். தேவர்கள் சிவபெருமானின் கருப்ப வெப்ப நோயை ஆற்றமாட்டாது பெருமானை வேண்ட சுராக்கர் எனும் அசுரனைக் கொன்ற சுரகரேசம் சென்று தீர்த்தத்தில் மூழ்கி

பெருமானை பூசிக்க கட்டளையிட அதின்படி பூஜித்து வெப்புநோய் நீங்கப் பெற்றது. கங்கையில் விட்ட வீரியம் சரவணப் பொய்கை அடைந்து ஆறு முகத்தோடு முருகன் அவதார காரணம். உடலுக்கு வரும் நோய் இறைவன் வழிபாட்டினால் தீரும். எல்லாப் பொருளும் சத்திசிவ வடிவமாக உள்ளன என்பது தெளிவு.

## 25. சவுணகீசுரர்.

வன்னீசத்திர்க்கு வடக்கு, சவுனகமுனிவர் பூஜித்து மும்மலத்தை நீங்கப்பெற்று முக்தி அடைந்தனர். சவுனகேசம்.

## 26. வன்னீசர்.

ஷிக்கு தேற்கில் சமீபத்தில் கங்கைக் கரையில் ஐயரம்பையர் என்னும் சகோதர தீர்த்தம். அக்கினி பூசித்து யாக அவிசை தாங்கச்சக்திபெற்றது. மீன்கள் அக்கினிபகவானின் மறைவை தெரிவித்ததால் தூண்டிலில் அகப்பட்டு இறக்க சாபம் பெற்றது. வழிபடுபவர்கள் வலிமைபெற்று முத்தி அடைவர்.

## 27. மாண்டுகண்ணீஸ்வரர்.

மாண்டுகண்ணு முனிவர் பூசித்தது. ஒக்கப்பிறந்தான் குளத்து தெருவில் மேல்கோடியில். தேவமாதர்கள் ஐவர் சுகத்தை இவ்வுலகத்தில் ஷி முனிவர் நுகர்ந்து இந்திரனும் நாணும்படி போக போக்யம் அனுபவித்து முத்தியும் அடைந்தது. ஐயரம்பையர் தீர்த்தம்.

## 28. காயாரோகணேசுரர்

பிள்ளையார்பாளையத்திற்கு தெற்கே, வேகவதி ஆற்றின் வடகரையில். ஸ்ரீ லக்ஷ்மீதேவி திருமாலை கணவராக அடையப் பூசித்து அடைந்தது. [illegible]வான்,

MAHAMAHOPADHYAYA

இயமன் பூசித்தது. வியாழக்கிழமையில், வேகவதிக்கு தெற்கில் உள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதும், சிவ பெருமானை தெரிசிப்பதும் பேறு அடையச்செய்யும் ஷை தீர்த்தக் கரையில் செய்யும் கிரியை பிதுர்க்களை நற்கதி அடையச்செய்யும். இயமனும் பூசித்து தென்திசைக்கு அதிபதியாக நியமனம் பெற்றான். இறைவன் அடியவர்க்கு எமபயம் இல்லை.

## 29. திருமேற்றளி.

ஷைக்கு வடமேற்கில். ஏகாம்பரநாதர் கோயிலி லிருந்து மேற்கு 1 மைல் பிள்ளையார்பாளையம் திருமேற்றளி தெருவில். விஷ்ணு தலமாய் இருந்தது. திருஞான சம் பந்தர் காலத்தில் திருமால் தவம்செய்துசாரூப பதவி பெற்றது, 118 தலங்களை ருத்திரர்கள் பூசித்ததில் முதன் மையானது. முந்தீஸ்வரர் வேதபுரீஸ்வரர் ஆலயங்கள் தனியே உண்டு. கீழ்க்கோடியில் திருஞானசம்பந்தர் ஆல யம் தனியே உள்ளது. அதன் எதிரில் அம்பலவழக்கு மேடையும் ஒன்று உண்டு.

## 30. கணிகண்டேசுரர்.

ஷைக்கு கிழக்கில் கருக்கினிலமர்ந்தவள் கோயில் தெருவில் மேலண்டை கோடியில் கணிகண்டமுனிவர் பூசித் தது.

## 31, தக்கீசம்

பிள்ளையார்பாளையம் கச்சியப்பன் தெரு என்று வழங் கும் நடுத்தெருவில் உள்ளது. தக்கன் பிள்ளைகளை படைப்புத் தொழில் அடைய ஏவப்பட்டதை (இருமுறை தடைசெய்து) நாரதரால் தவம் செய்வதை விடும்படி உப தேசம் பெற்று பூசித்து முத்தி அடைந்த இடம். நாரதர்

சாபப்படி சிவபிரானுக்கு அவிர்ப்பாகம் கொடுக்காது யாகம் செய்து தானும் மற்ற தேவர்களும் வீரபத்திரரா லும் பராசக்தியாலும் இறந்தொழிய பிரமன் வேண்டுத லால் உயிர்ப்பித்தபின் லிங்கம் ஸ்தாபித்து, பூசித்து பேறு பெற்றதும், மார்க்கண்டேயருக்கு அனுக்ரகம்செய்த இடம். யாகத்திற்கு தலைவரான திருமாலின் சக்கரம் வீரபத்திரர் அணிந்திருந்த வெண்டலைகளில் ஒன்றால் விழுங்கப்பட்டது.

## 32. வன்மீக நாதர்.

ஷை க்கு வடக்கில் கழனியில் தேவேந்திரன் பூசித் தது. தேவர்கள் அவிர்ப்பாகத்தை அபகரித்த விஷ்ணுவை இந்திரன், பெருமான் உத்திரவின்படி செல் உருவமாகி வில்லின் நாணை அறுத்து தலைபோகச் செய்ததும், மருத்து தேவர் சிவபிரானால் அவிசு அடைய வரம்பெற்று விஷ்ணு வை உயிர்ப்பித்த இடம். சாலாபோக கிராமத்தில் நஞ்சை நிலத்தில் உள்ளது. செல்வம் யாக்கைகளையே யன்றிப் புகழை விரும்புதலும் மிக்க துன்பத்திற்கிட மாகும்.

## 33. வயிரவீசம்.

பிள்ளையார்பாளையம் சோணீஸ்வரர்கோயில் தெருவில் பிரமன் ஆன்மாக்களின் மலத்தை ஆணவத்தால் தானே போக்குவதாக மொழிந்ததாலும் வேதங்கள் ஆலாலமுண் டவனே முதன்மையானவன் என்றதை பிரமன் மறுத்த தாலும் வயிரவரால் 5-வது சிரத்தைக்கொய்த இடம். நான் முகன் எனும் பெயர் பெற்றது, சிவபெருமானே பரம் பொருள். செருக்குக் கொண்டவர்களை இறைவன் தண் டிப்பான். ஷை கோயிலில் பெருமான் நகரத்தை காவல்

செய்ய ஆக்யாபித்ததும் **பிரம கபாலத்தில்** இரத்தத்தை பெற்று கணங்களுக்கு கொடுத்துவிடும்படிக்கும் அருளியது.

மகாவிஷ்ணு **விடுவச்சேனனை** சூலத்திலிருந்து நிவர்த்திக்கப்பட்ட இடம். **ஒன்பது லிங்கங்கள்** உண்டு, பார்க்க வேண்டிய இடம்.

ஷடிக்கு வடக்கில் வேகவதி ஆற்றின் தென்கரையின் திருப்பருத்திக்குன்றம் என்னும் ஜெயினர் கோயில் உள்ளது. வேலைப்பாடுள்ள மேன்மைபெற்ற அருகர் தலம் பார்க்கவேண்டியது.

## 34. விடுவச்சேனீசர்.

ஷடிக்கு தெற்கு. **விடுவச்சேனர்,** விரபத்திரர், விஜயகர் இவர்கள் எதிரில் விகட நடனம் செய்து மகிழ்ப்பித்து வயிரவமூர்த்தியின் தக்கயாக அழிவுகாலத்தில் வெண்டலை விழுங்கிய சக்கரத்தை **விகடச்சக்கர விநாயகர்** (ஏகாம்பரநாதர் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் கீழ் பக்கம் உள்ளது.) மூலம் சக்கரம் பெற்று விஷ்ணுவிற்கு கொடுத்தது. திருமாலும் விகடநடனத்தை சக்கரத்தைப் பெற்றபின் ஆடச்செய்து பார்த்து மகிழ்ந்தனர்.

## 35. பலபத்ராமீசர்.

**பிள்ளையார்பாளையம்** அய்யனாரப்பன் தெருவு இந்திர முதலி வீட்டு பின்புறம், சாலாபோக நிலத்தில் உள்ளது. **பலபத்ரர்** பூசித்தது. பலராமர் பாரதயுத்தத்தை வெறுத்து, தீர்த்தயாத்திரை செய்தபோது **உபமன்யுமுனிவரிடம் சிவதீட்சை** பெற்று லிங்கம் பிரதிட்டை செய்து பூசித்தது. நற்குணமுடையவர் எக்காலத்திலும் இறைவன் பணிக்கு ஆளாகுவர். வயிரவர் கோயிலில் உள்ளது.

## 36. கற்கீசர்.

பின்னைபார்பாளையம், கிருஷ்ணராயர் தெரு என்று வழங்கும் ஐயனாரப்பன் கோயில் தெருவில் வடகோடியில் நஞ்சை நிலத்தில் உள்ளது. திருமால் பிருகுமுனி சாபத்தால் கற்கி ஆகி கொடியவர்களை அழிக்க பூசித்தது. மண்ணி தீர்த்தம். போக, மோட்சங்களைக் கொடுக்கும்.

## 37. வீரராகவீசர்.

ஷை க்கு தெற்கில். புத்தேரி எனும் புத்தர் தெரு தென்பக்கம் கழனியில் ஸ்ரீராமர் பூசித்தது. சீதையை மீட்க அகத்தியமுனிவர் ஆணையின்படி சிவபெருமானிடம் பாசு பதாஸ்திரம் பெற்றது. சீயால முதலி கழனியில் உள்ளது. தொழுபவர் சத்துருபயத்தினின்று விடுபடுவர்.

## 38. அகத்தீஸ்வரர்.

அகத்தீஸ்வரர் ஷை க்கு வடக்கே புத்தர்தெரு மேல் கோடியில் உபநிஷத் மடத்தின் வடபாகத்தில் அகத்திய முனிவர் பூசித்தது. விக்ரம ஆனி மாதத்தில் கிலமாய் இருந்ததை பழுதுபார்த்து கும்பாபிஷேகம் செய்யப் பெற்று பூசை நடந்து வருகிறது. அதைச் சேர்ந்த தோட்டம் வகை பார்வை குறைவால் சீர்கெட்டிருக்கின்றன. தண்டகாரண்யத்தில் ஸ்ரீராமவனவாசத்தில் சீதையை இலங்கேஸ்வரன் எடுத்துப்போனதை தேடி வரும் போது இக்காஞ்சியம்பதியை ஸ்ரீராம இலக்குமணர் அடைந்து மாவடிமரகதத்தை தெரிசித்து தமிழ் முனிவரிடம் ஸ்ரீராமர் கூறிய வரலாற்றின்மேல் தத்துவோபதேசமும், சீதையைமீட்க இலிங்கம் நிறுவி பூசித்து வீரம் பெறுக என்று அருளிச்செய்த இடம். இப்போது இருக்கும் மடாதிபதி மடத்தைச் சேர்ந்தவழியில் கவனிகது சீர்திருத்தம் செய்து வருகிறார்.

## 39. அனேகதங்காவதம்.

ஊடிக்கு மேற்கில். 2 பர்லாங்கில் விநாயகர், குபேரன் பூசித்தது. வல்லபை கணபதி பூஜை விசேடம். சுவாமி அனேகபேசன் சிவபெருமானால் யதத்வேஷர்களை இடை யூறுசெய்யவும், இரணியபுர அசுரராகிய கேசி முதலியவர் களை சங்கரித்தது அசுரன் மகள் வல்லபையை விவாகம் செய்துக்கொள்ள விநாயகருக்கு சிவபெருமான் வரம் தந்த இடம். விநாயகர் லிங்க வழிபாடு செய்தமையின், அதுவே எல்லாவற்றிலும் சிறந்த வழிபாடாகும்.

## 40. கயிலாயம்.

ஊடிக்கு மேற்கில். சித்தர்கள், புத்தர், நாரதர் சிவ நெறியிலிருந்து அசுரரை கெடுத்த பாவம் நீங்க, பூசித்தது. முப்புரம் (பொன், வெள்ளி, இரும்பு கோட்டைகள்) எரித்தது. பிரம்ம தீர்த்தம். கைலாசநாதர் மகாசிவராத்திரி விசேஷம். இறைவன் கோயிலை (உள் பிரகாரம்) வலம் செய்தல் மிகு பிரபாவம். பிறப்பு இறப்பு நீங்கும். பாவம் மலைபோய் மெலிவடைந்ததால் பருத்திக்குன்றம் (ஜெயினர் கோயில்) எனப்பேர் வழங்கப்பட்டு வேகவதி ஆற்றின் தென்புறத்திலிருந்து வருகிறது. இறைவழி பாடுடையாரை யாவராலும் வெல்லுதல் இயலாது. கைலைக்கு நிகரானதலம் இது. முத்திக்கு வித்தான தலம். தெரிசனம் செய்ய உள்ளேபோக கட்டணம் வசூல் செய்வது மிகவும் வருந் தத்தக்கது.

## 41. நரசிங்கீசர்.

தாமல் கிராமத்திற்கு வடக்கில் ஆற்காடுபோகும் ரோட்டில் 7 மைலில் விஷ்ணு பெருமான் அருளினால் நரசிங்க அவதாரம் எடுத்து இரண்யசம்மாரம் செய்த போது உதிரவெறியினால் மூவுலகத்தையும் வருத்தும்

போது லக்ஷ்மியும், பிரகலாதனும், தேவர்களும் துதித்து வெறி நீங்காததால், தேவர்கள் வேண்டுகோளின்படி சிவபெருமான் **சரபவடிவாய்** நரசிம்மத்தின் வாழ்நாளை போக்க மாயோன் மயக்கம் நீங்கி பூஜித்து திருவருள் பெற்ற இடம். ஆலயம் சீர்கெட்டிருக்கிறது. கவனிப்பாரில்லை.

## 42. வராகீசர்.

ஷெடிக்கு தெற்கில். திருமால் சிவபெருமான் அருள் பெற்று வராக உருவெடுத்து இரண்யாக்கனை கொன்றபின் அச்செருக்கினால் உலகத்திற்கு துன்பம் நேர்ந்தபோது சிவபெருமான் வேடுருவெய்தி வராகத்தின் கொம்பை ஒடித்து செருக்கை அடக்கியபின் பூஜித்து பேறுபெற்றது குளத்தையும் கோவிலையும் கவனிப்பவர்வேண்டும்.

## 43. அந்தகேசர்.

ஷெடிக்கு கிழக்கில் 1½ மைல் **திருப்புக்குழி** பெருமாள் கோயிலுக்கு கீழண்டை இரணியாக்ஷன் குமாரன் அந்தகாசுரன், கொடுங்கோல் அரசால் தேவர்கள் பெண்வடிவம் கொண்டு கைலையில் வாசம் செய்தபோதும், தாருகாவனத்து முனிவர்களை சோதிக்க சிவபெருமான் சென்றிருந்தபோதும், அசுரன் போருக்குவர அம்பிகையினருளால் திருமால் அவனை ஜெயித்து, ஓடிப்போய் பின் இறைவன் பிச்சாடனகோலத்தால் ரிஷி பத்தினிகள் கற்பு கலைந்ததை முன்னிட்டு ரிஷிகள் அபிசாரயாகம் செய்ய, அதில் உண்டான **முயலகன், புலி, பாம்பு, மான் பூதம் மழு, யாகத்தீ** இவைகளை ஏவ, இறைவன் அவைகளை அடக்கி கைக்கொண்டு விளங்கி, முனிவர்கட்கு ஞானத்தை அளித்தது. முனிவர்கள் காஞ்சியில் பிறந்து இல்லறநெறியில் நின்று தனித்தனி சிவபூஜை செய்து நல்ல வரங்களைப் பெற்று வாழ்ந்தனர். அப்பூசையின் திறத்தால் காஞ்சி

யில் உள்ளவர் யாவரும் முனிவர்களே. கற்களெல்லாம் இலிங்கங்கள். நீரெல்லாம் கங்கை. சொற்களெல்லாம் மந்திரங்கள். செய்தொழில் இறைவன் திருப்பணியாம். அசுரன் மறுபடியும் போருக்கு வந்த போது இறைவன் ஆக்கினைப்படி வயிரவரால் அசுரனை சூலத்தில் கோர்த்து நடனம் செய்தபோது, அந்தகாசுரன் பெருமானைத் துதிக்க, முத்திபெறச் செய்தது. இந்நகரம் இயமனுக்கு நுழைதற்குரியதன்று.

## 44. திருமாற்பேறு.

**திருமால்பூர்.** புகைவண்டி நிலயத்திலிருந்து 3 மைல் மேற்கில் உள்ளது. திருமால் தினம் 1000 மலரால் அர்ச்சித்துவர ஒருநாள் ஒரு மலர் குறைய, தன் கண்ணை யெடுத்து அர்ச்சித்து குபன் என்னும் அரசன் கருத்தின்படி ததீசி முனிவர்மேல் விட்டு, கூர்மழுங்கின சக்கரத்திற்கு பதில் சுதர்சனமும், செந்தாமரைக் கண்ணன் எனும் பெயரும் பெற்றது. இவ்வூரில் ஒருநாள் வாசம் செய்பவர் பிறவித்தளையை விடுவார்கள். **மணிகண்டேசர். மால்வணங்குநாதர். கருணைநாயகி அஞ்சநாட்சியம்மை.** வில்வமரம், சக்கரதீர்த்தம். விருத்தக்ஷீரநதி. அப்பர் சம்பந்தர் பாடல்பெற்ற தலம். **பவனகிரி. விஷ்ணுபுரம்** எனும் பெயரும் உண்டு.

## 45. பரசுராமீசர்.

திருமால்பூர் ரயிலடிக்கு ½ மைல் மேற்கில், ஆற்றின் வடகரையில் உள்ளது. விருத்தக்ஷீரநதி. திருமால் ரேணுவுக்கும், சமதக்கினிக்கும் பிருகுமுனிவர் சாபத்தின்படி (பரசுராமர்) புத்திரராக அவதரித்து, இருந்து பூசித்தது. தந்தை வாக்கின்படி தாயைக்கொலைசெய்து. தந்தை அளித்த வாக்கினால் மீண்டும் உயிர்ப்பித்தவர்.

தந்தையைக் கொன்ற அரசனாகிய கார்த்தவீரியனைக் கொல்ல பரசு என்னும் ஆயுதமும், பரசுராமன் என்னும் பெயரும், சங்கரனுடன் மற்போர் செய்து, அனுக்ரகமும் பெற்றது. **தாய்க்கொலை மிருந்த பாதகம்**, பழைய பாவங்களும் இந்த இலிங்கத்தை வணங்கினோர்க்கு விலகும்.

## 46. ஸ்ரீரேணுகீச்சுரம்.

ஊடிக்கு தெற்கில் **(பளூர்) பரசுராமபுரம்.** கிழக்குப் பார்த்த சந்நிதி. ஜமதக்னிமுனிவர் மனைவி ரேணுகை கார்த்தவீரியனுடைய நிழலை தண்ணீரில் கண்டு மனம் வேறுபட்டதால் உண்டான கற்பின் பங்கத்தை நிவர்த்தி செய்ய பூசித்து தெய்வமானது. இறைவனை வழிபட்டால் எல்லாப்பேறும் பெறலாம்.

## 47. யோகாசாரியார்தளி

ஊடிக்கு தெற்கில் **கைலாசநாதர். அகரம் யோகாசாரியார்** தட்சணாமூர்த்தியை பூசித்தது. இதிலிருந்து சர்வதீர்த்தம் வரை **சுவேதலிங்கம்** முதலாக **இலகுளீசம்** (சர்வதீர்த்த வடகரை) வரையில் சுவேதன் முதல் இலகுளீசன் ஈராக உள்ளவர்கள் பூசித்து பேறு அடைந்தது **இலகுளீசம்.** எத்தகைய சிறந்த பதவியும், சித்தியும் இறை வழிபாட்டினால் கிடைக்கும்.

## 48. முப்புராரீசம்.

சர்வதீர்த்தம் மேல் திசையில் அம்பிக்குப்போகும் மண்பாதையின் 1½ மைல் தூரத்தில் இறைவி பெருமானை கம்பாநதியில் பூசைசெய்தகாலத்தில் பூசையின்பொருட்டு அம்பிகாவனம் எனப் பெயரிட்ட நந்தவனமுள்ள இடம். **சுதன்மன், சுசீலன், சுபுத்தி** எனும் அசுரர்கள் புத்தன் பொய்யுரையால் மயங்காது சிவநெறியில் நின்றும் தவறாது

நிஷ்காமிய தவம்செய்து திரிபுரதகனத்தின்போது மீட்கப் பட்டதின் நிமித்தம் பூசித்து துவாரபாலகர் பதம் பெற் றது. சுயப்பிள்ளையார் கோயில் சமீபம். சிவபூசையால் எண்ணிய பலனைப் பெறலாம். இறைவன் அருள்வழி நிற்பவர்க்குத் தீங்கு அணுகாது. எண்ணிய நலன்களை யும் அடையலாம்.

## 49. வாணேசுரர்

ஓலிமகர்மதுபேட்டைக்கு வடக்கில் ஓணகாந்தன்றளிக்கும் அரக்கோணம்போகும் பாதைக்கும் மேற்கில் ஒரு பர்லாங் கில் குட்டைமேட்டில் ஆலயம் இல்லை சிவலிங்கம் மாத்தி ரம் உண்டு. **வாணாசுரன் பூசித்து, ஏகச்சக்ராதிபத்யம் பெற் றது.** தோள் தினவு நீங்க கிருஷ்ணபகவானால் தோற் கடிக்கப்பெற்று பூசித்து பேறுபெற்றது. கணத்தலைமை யும் பெற்ற இடம். பல பெருமக்கள் இருந்தும் கவனிப் பவர் இல்லை.

## 50. ஓணகாந்தன்றளி

ஷை க்கு கிழக்கில் பெரியகாஞ்சிபுரம் பெரியகோயி லிலிருந்து மேற்கு ½ மைல் பஞ்சுப்பேட்டை மேலண்டை கோடியில் ஓணன், காந்தன் என்னும் வாணாசுரனின் மெய்க்காப்பாளராகிய இரண்டு அசுரர்கள் பூசித்து மெய்ஞ்ஞானத்தைப்பெற்று முக்தியை அடைந்தார்கள். இறைவன் வழிபாடு சிவஞானம் மூலமாக முக்திடைத் தரும். **சுந்தரருக்கு பொற்காசு அளித்தஇடமும் இதுவே.** இரண்டு ஆலயங்கள் சேர்ந்தாப்போல் இருக்கின்றன. ஆலயம் பணம் படைத்தவர் ஆட்சியில் பணம் சம்பா தித்து கொடுத்தும் பாழடைந்து கிடக்கிறது.

## 51. ஜலந்தரீசம்

ஷெடிக்கு செற்கில் ஜலத்தில தோன்றிய ஜலந்தராசுரன் செய்த சிவபூஜையால் வலிமைபெற்று, பெருமானையே ஜெயிக்க கைலைக்கு சென்றபோது அசுரனின் பாரியாள் பிருந்தையின் அழகில் (மாயையில்) ஈடுபட்டதின் காரணவிசேஷத்தால், திருமால், அவள் இறந்த சாம்பரில் புரண்டு கிடக்க உமாதேவியின் சாந்தைதேவர்கள் சாம்பலில் விதைக்க, அது அகத்தி, நெல்லி, துளசிஎனும் மூன்று மரங்களாக. **துளசியை திருமால் மயக்கம் தெளிந்து** பிருந்தையாகக்கண்டு அணைந்து ஆனந்தமடைந்தார். மூன்று மரங்களையும் துவாதசியில் துதித்தவர்களுக்கு திருமால் அருளளிப்பர். சண்டையில் மாண்ட அசுரன் காஞ்சியில் ஓளிப்பிழம்பாக தான் பூசித்த இலிங்கத்தில் கலந்தான்.

## 52 நவக்கிரகீசர். செவ்வந்தீசர்.

**ஏகாம்பரபுரம்** பஞ்சுபேட்டைக்கு வடக்கில் கழனியில் **பரிதீஸ்வரர்.** சூரியன், வாயு, நவக்ரகங்கள் பூஜித்தது. பரிதி சூலதீர்த்தம். அமாவாசையில் பிதிர்க்கடன் செய்தல் விசேஷம். வயிரவக்கடவுள் அந்தகாசூரனை சூலத்தில் குத்திக் கொண்டு வந்து இரக்கிய இடம். **வெள்ளைக்குளம்,** கீழ்க்கரையில் சந்திரன் பூசித்தது, **சந்திரேசுரர்.** பூசிப்பவர்களுக்கு கிரகங்களுடைய வருத்தம் கிடையாது. சூல தீர்த்தக்கரையில் வாயுவேதன் இலிங்கம் அமைத்து செவ்வந்தி மலரால் பூசித்தது. **செவ்வந்தீசுரர்.**

## 53 இரணீசம்.

சர்வதீர்த்தம் மேல் கரையில் தீர்த்த கிரீஸ்வரருக்கு பின்புரம். இரணியன் பூசித்து மாளா வரம் பெற்றது.

சிவநெறியில் நின்று சிவபூஜையின் பலனால் மூன்று உலகத்தையும் ஆளப்பெற்றனன்.

## 54 சர்வதீர்த்தம். தீர்த்தீஸ்வரர்.

ஸ்நான விசேஷம். சகலபாப விமோசனம். ஸ்நானம் செய்து ஸ்ரீ ஏகாம்பரநாதரை தெரிசனம் செய்யவும். பிரகலாதர், பரசுராமர் விபீஷணர், அர்ச்சுனன், அசுவத்தாமா முதலியவர்கள் முழுக்காற்றி பாப விமோசனம் அடைந்தார்கள். **விஸ்வநாதேஸ்வரர்.** மேல் கரையில் பரசுராமர், பிரகலாதர் பூசித்தது. காசியைவிட **காஞ்சியே** சிறந்ததென்று கருதிவந்து தங்கியது. இவ்விடம் முத்தி மண்டபம் ஒன்று உளது. கண்டவர்கள் முக்தராவார்கள். **காமேஸ்வரர்.** தென்புரம் மன்மதன் பூசித்தது, இஷ்டகாமியார்த்தங்களைக் கொடுக்கும். **கெங்காதரீஸ்வரர்.** கீழ்கரையில், வருணன் கங்காதேவியோடு பூசித்தது **லக்ஷ்மணேஸ்வரர் சீதேஸ்வரர். மல்லிகார்ச்சுனேஸ்வரர்.** தென் கரையில் **சுவேதரேஸ்வரர்.** வடகரையில் எதிரில் **முத்தி மண்டபங்கள்.** மூன்று முத்தீஸ்வரர் கோயிலில், 2 சர்வதீர்த்தக்கரையில், 3 சிவ கங்கைக்குத் தெற்கில் திருவிராமீசத்தில் சிவபெருமான் எதிரில். பரமானந்த மண்டபம். வைகரையில் இம்முத்தி மண்டபங்களை கருத்தில் நினைக்கதொல்வினையும் மும்மலங்களும் நீங்கி முத்தியடைவர். இதன் தென்பாகத்தில் அமுத தீர்த்தம். வெள்ளைக் குளம்.

## 55 பிறவாத்தானம்.

**கோனேரிகுப்பம்** கம்மாளத்தெரு வடகோடியில். கிழக்கில். அதன்மேற்கில் **முத்தீசர்** ஞானதீர்த்தம் உண்டு. வாமதேவன் கருவில் பிறக்க பயந்து பூசித்து பிறவாமை எய்தியது. வணங்குவோர் பிறவியை நீங்குவர்!

## 56 இறவாத்தானம்.

ஷேடிக்கு எதிரில் ரோட்டுக்கு மேற்கில். இறவாம விருக்க மார்க்கண்டேயர், சுவேதன் வகை பூசித்து பலன் அடைந்தது. பூசித்து வந்தால் ஆயுள் விருத்தி. இறப்பையும் கடக்கலாம்.

## 57 மகாலிங்கத்தானம்.

ஷேடிக்கு கிழக்கில் கோவேரிருப்பம் அப்பாருவ் முதலியார் தெருவில் அன்னியப்ப முதலியார் வீட்டிற்கு எதிர் சந்தில். மேற்கு பார்த்த சந்நிதி. பிரமன் திருமால் இருவரும் பூசித்து போர் மயக்கம் நீங்கி தான் தான் பெரியவர் என்ற மருளும் நீங்கப்பெற்றது. மஹாலிங்கம் இறைவனொருவனே முழுமுதற்கடவுள் என்பது துணிபு. ஷேடி இடத்தில் உள்ள பெருமக்கள் இடத்தை மிகச்சீர் கேடான நிலையில் வைத்திருக்கிறார்கள்.

## 58 வீரட்டகாசம்.

ஷேடிக்கு வடக்கில் பெருமான் விஷம் சாப்பிட்டது. கோங்கணமுனி (சாக்கியர்) கல்லால் பூசித்தது நீருண குளிகையும், வரமும் பெற்றது. பார்வதி பூசித்து, பெருமானால் அசுரரின் காலதோஷத்தால் காளி என்று அழைத்தது நீங்க கௌரி நிறமும் பெயரும் அடைந்தது. சக்கர தீர்த்தம். பச்சை, பவளவண்ணர் பூசித்து நிறமடையப் பெற்றது. திருமகள் காமாட்சியை பூசித்து, விஷ்ணு சபித்த கரு நிறம் ஒழிந்து பொன்னிறமும் வரமும் பெற்றது. திருமால் பூதத்தை கொன்றது. பெருமான் கள்வன், நின்றவன், இருந்தவன், கிடந்தவன் என்னும் நான்கு வடிவம் அடைந்தது. எல்லா சக்தியும் இறைவியினிடத்து அடங்கியவைகளே.

### 59. பாண்டவிசர்.

ஷெடிக்கு தென்கிழக்கில் பஞ்சபாண்டவர், திரௌபதை வகை பூஜித்தது. கோனேரிகுப்பத்திலிருந்து ரயிலுக்குப்போகும் பாட்டையின் வட பக்கத்தில், முருகேச நாயக்கர் கோட்டத்தில் ஒன்று ஜெகன்னாத நாயக்கர் தோட்டத்தில் மூன்று, கம்பநாயக்கர் தோட்டத்தில் ஒன்று, அமுதநாயக்கர் தோட்டத்தில் **திரௌபதை** பூஜித்தது ஒன்றும் சிவலிங்கங்கள் இருக்கின்றன. ஷெடிக்கு தென்கிழக்கில் **ஈசானன்** பூஜித்தது. **கைலாசநாதர் லிங்கம்** ஆக **7. உரோமச முனிவர்** வகை பூஜித்தவைகளும், ரயில் ஸ்டேஷனுக்கு கீழ்த்திசையிலும் பரஞ்சோதி அம்மன் கோயிலிலும் இருக்கின்றன.

### 60. மச்சீசர்.

**கீழண்டை இராஜவீதி** மேலண்டை வாடையில் இப்பி தீர்த்தம். சோமுகா சூரனுக்காக திருமால் பூஜைசெய்து அசுரனையும் அவனுக்கு துணையுமாய் சங்குருவம் கொண்டு வந்த பஞ்சசன் என்பவனையும் கொன்று பாஞ்ச சன்னியமாகக் கொண்டு வேதங்களை மீட்டு, தேவர்களுக்குக் கொடுத்தது. ரேகாவதி என்பவளின் புத்திரன் சுவாமியை அர்ச்சித்த முதது மாலையை நெருப்பிலிட்டதை எம்பிரான் அருளால் இப்பி தீர்த்தத்தில் உற்பவித்து கொடுத்தது. **மச்சலிங்கம்**. பூஜை இலலை. கலிகால தர்மகர்த்தாவின் போக்கு. கோயிலின் நிலமும் ஆக்ரமிக்கப்பட்டிருக்கிறது.

### 61. நகரீஸ்வரர்.

கீழண்டை ராஜவீதி தென்கோடியில் கீழண்டை வாடையில் பூஜையில்லை. மக்கள் வாசத்திற்கு இடமாகிவிட்டது. சைவபெருமக்கள் கவனித்தல்வேண்டும்.

## 62. கண்ணீசம்.

திருப்பாற்கடலில் தோன்றிய விஷத்தினால் கறுத்த மேனியைப்போக்க கண்ணன் பூஜைசெய்து, பெருமான் முடியில் சந்திரன் அருகில் தோன்றிய **கச்சி நிலாத்துண்டப் பெருமானாக ஸ்ரீ ஏகாம்பரநாதர்** ஆலயத்தில் அமர்ந்தது வடவண்டை ராஜவீதியில் மொட்டைகோபுரம் என்று வழங்குமிடம்.

## 63. கவுஸிகீசம்.

எம்பெருமான், பார்வதி தேவியை காளியென்று அழைத்தபோது திருமேனியிலிருந்து கழிந்துபோன கரு மேனியின் அம்ஸமான கவுஸகி பூஜித்து பேறுபெற்றது. அக்கவுஸகி உலகத்தை துன்பம்செய்த **சும்பன், நிசும்பன்** எனும் அசுரர்களை சம்மாரம் செய்தது. காமாக்ஷியம்மன் கோயில் வடகிழக்கில் புஷ்ப தோட்டத்தில் (லாலாதோட்டம்) உள்ளது.

## 64. மாகாளேசம்.

காமகோட்டத்தின் கோயிலின் மேல்புரம் ஸ்ரீகாளத்தியில் இருந்த மாகாளன் என்னும் பாம்பு இங்குவந்து பூஜித்து பேறுபெற்று தென்கயிலை அடைந்து வீடுபெற்றது.

## 65. பராசக்தி.

குமரகோட்டத்திர்க்கு வடபுறம் துர்க்கையாக (காமாக்ஷியம்மை) மாகாளீசத்தின் மேல்புரம் விளங்குகிறது. சமஷ்டிமாகாளன் எனும் சர்ப்பராஜன் பூசித்தது. **மஹாகாளேசுரர்.** விஸ்வபிராமண குலத்தவர்கள் ஆதிக்கத்திலிருந்து அவஸ்தைப்படுகிறது.

## 66. மங்களேச்சுரம்.

பார்வதியின் தோழி மங்களை என்பவள் பூஜை செய்தது. மங்களதீர்த்தம். மங்களவாரம் விசேஷம். கெங்கைகொண்டான் மண்டபத்திற்கு பின்புறம். **மங்களேசப் பெருமான்.**

## 67. இராமநாதீச்சுரம்.

ஷை-க்கு மேற்கு **ஏகாம்பர நாதர் சன்னதிவீதி** கீழண்டைவாடை தென் கோடியில். ஸ்ரீராமர் அரக்கனை கொன்ற தோஷம் நீங்க பூஜித்தது. சேதுவைப்போல் சிறந்தது. குருக்கள்மார் சமீபத்தில் இருந்தும் துரிஞ்சல் இருப்பிடம் கொண்டிருக்கிறது. கோயில் சிவாச்சாரியார்கள் கவனிக்கவும்.

## 68. மாதலீச்சுரம்.

ஷை-க்கு வடக்கில் தேவேந்திரன் இரத சாரதி, **மாதலி** ஸ்ரீ ராமருக்கு இரதசாரதியாய் இருந்து அவர் வெற்றி பெற்றபின் பிரதிஷ்டை செய்து பூஜித்தது. **சிவகஞ்சி** போலீஸ் ஸ்டேஷனுக்கு கிழக்கு தோட்டத்தில் உள்ளது. தர்கா சமீபம்.

## 69. அனந்த பத்ம நாபேசுரர்.

ஷை-க்கு மேற்கில், மஹாவிஷ்ணு சொக்கட்டானாட்டத்தில் பெருமானே கெலித்தாரென்று பொய் கூறியகால் **பார்வதியால்** பாம்புருவாக சாபம் பெற்றதை நீக்க பூஜித்தது. லிங்கப்பையர் தெருவில் தென்னண்டை வாடையில் வேதபாடசாலைக்கு எதிரில் நெ. 10, பி. உள்ள ஐயர் வீட்டு புறக்கடையில் உள்ளது. வேத மோதுவோர் வீட்டில் உள்ள சிவலிங்கத்தின் அருகிலேயே ஷை வீட்டுக்கார ஐயர் அவர்கள் மல ஜலம் கழிக்க வசதி செய்து

கொண்டது மிகவும் பாராட்டத்தக்கது. கருணையின் திறம் எவ்வாறுமோ? பொய் சொல்பவர் தண்டிக்கப்படுவார். தெய்வம் வழிபடுபவர் கவனிக்கவும்.

## 70 கச்சி மயானம்.

**ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயிலில்** கீழ்புரம், துவஜஸ்தம்பம் அடுத்தாற்போல் தென்புரம், சிவபெருமான் **பண்டாசுரனை** பஸ்பமாக்கியது. தேவர்களுக்காக யாகம் செய்த இடம். **சிவகங்கை தீர்த்தம்.** இதில் அண்டத்தின் அகத்தும், புறத்தும் உள்ள எல்லா தீர்த்தமும் பொருந்தும். முனிவர்கள் பூஜித்தது. **அக்கினிபாயம். மயான லிங்கம்.** சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பது விளக்கம். மேற்கு பார்த்த சன்னதி

## 71. திருவேகம்பம், ஸ்ரீ ஏகாம்பரநாதர். ஏலவார் குழலம்மையார்.

காஞ்சீபுரம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கில் ¾ மைல். மூவர், பட்டிணத்தார் பாடியது. உமையம்மை தான் தக்கனுக்கு புத்திரியாக பிறந்ததின் அபகீர்த்தி ஒழியவும், விளையாட்டாக இறைவன் விழிகளை மூடிய பாபம் ஒழியவும் பூசித்தது. இறைவனை நதிக்கரையில் பூசிக்குங்கால் கம்பாநதி பெருக்கெடுக்க அன்பின் ஆர்வத்தால் தழுவிக்கொள்ளப்பட்டு முலை, வளைத்தழும்பு பெற்று திருமணம் நடந்த இடம். **வேதங்கள் மாமரமாய்** இருப்பது. பெருமான் ஆக்ஞைப்படி, மேற்கில் இறைவி உயிர்களை **இலளிதை** தேவியால் சகல உயிர்களும் திரும்பி படைக்கப்பெற்றது. மும்மூர்த்திகளின் வேண்டுகோளின்படி **க**, **அ**, **ம**, எழுத்துகளுக்கு இணங்க **மாவடி**

யில் காமாட்சி எனப் பெயர் பெற்று அமைந்திருக்க வரம் பெற்றது. இலிங்கடிவம்தான் ஏகாம்பரநாதர். இப்பெயரை ஜெபிப்பவர் முக்தியை அடைவர். கம்பைநதி ஸ்நான விசேஷம். காசி கங்கையைவிட மேன்மை பெற்றது. எல்லா மலபந்தங்களையும் போக்கவல்லது. இக்காஞ்சிமா நகருக்கு, 1. புவனசாரம், 2. மும்மூர்த்தி வாசம், 3. விண்டுபுரம், 4. காஞ்சி, 5. கலிசித்து, 6. இலயசித்து, 7. சகல சித்திபுரம், 8. தபோமயம், 9. பிரமபுரம், 10. ஆதி பீடம், 11. கன்னிகாப்பு, 12. சிவபுரம். ஆக 12 பெயர் கள் உள்ளது. இப்பெயர்களை வைகறையில் தினம் துதித் தால் தீக்கனுகண்ட தீமை, நோய், வறுமை முதலியது பஞ்சில்பட்ட அனல்பொறி மயமாகும். முக்கியமான தலங்கள் பலவற்றுள் காசி, காஞ்சி இரண்டில் காஞ்சியே இறைவனுக்கு உவப்புள்ளது. இது காரணமாக சிர ஸாகிய காஞ்சியில் இறந்தவர்களின் உடல் வேகும்போது தலை வெடிப்பதில்லை. காஞ்சியை நினைக்க முத்தி தரும். இந்த காஞ்சியில் ஓர் இரவு தங்கினாலும் பலன் தரும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஆலந்தான் உகந்து அமுது செய் தானை" என்ற பதிகம் பாடி இடக்கண் பெற்ற இடம். மும்மூர்த்திகளும் தேவரும் பூசித்தது. 1. மாவடியில் ஸ்ரீ காமாட்சியம்மை பூசித்து இடப் பாகம் பெற்றது மூல லிங்கம். பிருதிவி லிங்கம் 2. அகத்தீசர் அகஸ்தியர் பூசித் தது. உள் ஆவரணத்தில் தென்புறம் நால்வருக்கு அடுத்த மேற்புரத்தில் வடதிசை தாழ்ந்தபோது கடலை ஆசமனம் செய்தவரும், வில்வலன் வாதாபியை அழித்தவரும், தன் குலத்தில் சங்கரனை தெய்வமெனப் பேனுத்திருவிலிகள் எய் தாதிருக்கவும், பிறந்தால் அன்றே இறந்தொழியவும், செருக் கடைந்த விந்தம், மேருகிரிகளை அடக்கியவரும், கைலாயத் திலிருந்து தன் மனைவி உலோப முத்திரையுடன் பொதிய மலைக்குப் போகும்போது தானும் அத்தகைய குலத்தில்

பிறவாதிருக்கவும் வரம் வேண்டி ஸ்தாபித்து பூசித்தது. 3. **வெள்ளக் கம்பர்.** தெற்கில் பிரம்மன் பூசித்தது அறுபத்துமூவருக்கு எதிரில். 4. **கள்ளக் கம்பர்.** 108 சிவலிங்கத்திற்கு மூன்றாவது மாயவன் பூசித்தது. 5. **மத்தளமாதவீசுரர்.** இறைவனுடைய நடனகாலத்தில் மாயவன் வேண்டுகோளின்படி மத்தளம் வாசிக்க அருள் செய்தது. குகப்பெருமானுக்கு இரண்டாவதும், மார்க்கண்டேயர் பூசித்ததிற்கு அடுத்ததும், காஞ்சி எல்லையாகிய பரவெளியில் காப்பு நடனம் செய்த இடம். 6, **நல்ல கம்பர்.** ருத்திரன் பூசித்தது. நிலாத்திங்கள் துண்டப் பெருமானுக்கு அடுத்த வடவண்டை. 7. **வாலீசம்.** **வாயுலிங்கர்,** கச்சி திருமயானத்தின் கிழக்கில் **சித்தர்கள்** பூசித்தது. வாலி பூசித்து தன்னுடன் சண்டையிடுபவர்கள் பலததில் பாதியும், பூசித்த லிங்கத்தைத்தான் எடுத்துப்போக விரும்பி வாலினால் சுற்றி யிழுத்தபோது அறுந்து போன வால் திரும்பப் பெறவும், வானரர்க்கு அரசனாகவும் இருக்க வரம் பெற்றது. 8. **பஸாவேஸலிங்கம், இடபேச்சுரம்.** கருடன் தானே பலமுள்ளவனென்றெண்ணிய செருக்கு நீங்கியது. திருமால் கைலை தரிசன காலத்தில் இடபதேவரின் நாசி சுவாஸ போக்குவரத்தில் அகப்பட்ட கருடனை கஷ்டப்படுத்தியமை முன்னிட்டு, ரிஷபம் பூசித்து சாபம நீங்கப்பெற்றது. சிவகங்கைக்கு மேற்கில். 9. **விண்டுவீசர்.** ஆயிரக்கால் மண்டபம் கோபுரத்திற்கு வடக்கில் மகாவிஷ்ணு பூசித்தது. 3-ம் ஆவரணத்தில் உள்ளது. தென்பக்கம் திருமால் யோக சாதனத்தால் இறைவன் திரு நடனத்தை இருதய கமலத்தில் கண்டு ஆனந்தமுற்று இலக்குமி, கருடன், ஆதிசேஷன் முதலியவர்கள் வேண்டுகோளின்படி தில்லைசென்று திருநடனத்தை தெரிசித்து மகிழ்வெய்தியது. படகமும் கணங்களுடன் முழங்கியது. இது தொண்டைநாட்டுச்

சிவதலங்கள் 32-ல் முதன்மை பெற்றது. பிருதிவிதலம். முத்தி தலங்களில் ஏழில் ஒன்று. திருக்குறிப்புத்தொண்டநாயனார் துணி வெளுத்துக்கொடுத்தும், சாக்கியநாயனார் கல் எறிந்து பூஜைசெய்து முத்திபெற்றது. ஆலய வெளிபிரகாரம், ஆயிரங்கால்மண்டபம், மதில், கோபுரங்கள் சீர்கெட்டிருக்கின்றன. அதிக வருமானம் இருந்தும் கவனித்துப்பார்க்கும் கர்த்தா இல்லை. மைலம் கோயிலை பார்த்து வேண்டியதைச் செய்ய முற்படவேண்டும்.

## 72. கங்கணீஸ்வரர்.

பெரிய கம்மாளத்தெருவில் **காப்புத் தீர்த்தர்** தரிசிப்பவர் மலநோய் நீங்கி முத்தி அடைவர். பார்வதி ஐப்பசி மாதத்து அமரபட்சம் ஏகாதசி திதி பூர நட்சத்திரத்தில் பூசித்து, கங்கணமணிந்தது. தீர்த்த இடம் வீடாக்கப்பட்டிருக்கிறது. கலிகால தர்மகர்த்தர்களின் கூத்து.

## 73. கடகேஸ்வரர்.

சின்ன கம்மாளத்தெருவில் பார்வதி பூசை இயற்றுவதற்கு முன்பு ஸ்தாபித்து காப்பணிந்தது.

## 74. ஸ்ரீ காமாட்சி அம்மன்.

**(காம கோட்டம்)** சிவகஞ்சியின் புகைவண்டி நிலையத்திற்கு நேர் மேற்கில் $\frac{1}{2}$ மைல். **பல ஆலயங்களுக்கும் அம்மன் ஒன்றே.** மூலஸ்தானத்தில் சுற்றுப்பிரகாரம் இல்லாததால் மக்கள் முக்கிய நாட்களில் வருத்தப்பட்டு அம்மன் தரிசனம் செய்யவேண்டியிருக்கிறது. சீக்கிரத்தில் சுற்றுப்பிரகாரம் அமைக்க ஆதீனத்தார் முன்வரவேண்டும். பராசக்தி, காளி என்கிற கறுப்பு நிறம் ஒழிந்து கவுரி நிறமடைந்து லட்சுமி, சரஸ்வதி இவர்களை தோழிகளாகப் பெற்று திருமணம் நடைபெற்றது. வரு

டந்தோறும் **பங்குனி உத்திரத்தில்** அகத்தியருக்கு, பெருமான் கல்யாண காலத்தில் பூமி சமமாய் இருக்க பொதிய மலைக்குப் போகச்செய்தபோது திருமண வைபவத்தை போகும் இடத்திலேயே தரிசிப்பாய் என்று அருளியபடி திருமணம் பெரிய கோயிலில் நடைபெறுகிறது. **ஆதிசங்கரர்** கோயிலும் உள் இருக்கிறது. **உலகாணி தீர்த்தம்** முக்கியமானது. பார்வையில்லாமல் பலவித கெடுதல்களுக்கும் உள்பட்டிருக்கிறது. **சுக்கிரவாரம் விசேஷம்.** ஸ்ரீ ஏகாம்பரநாதரால் ஈராழி நெல் அளிக்கப்பெற்று 32 தர்மங்களையும் அம்மன் வளர்த்த இடம். மேற்கில் **பராசக்தி** ஆலயம் தனியாக இருக்கிறது. நல்ல நிலைமையில் இல்லை. செ. 65. பார்க்க பூசை காலத்திலாவது பொதுமக்கள் தரிசனத்திற்கு வெளிக் கதவுகள் (மதில்) திறக்கப்படவேண்டும். இப்போதுள்ள மானேஜ்மெண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும்.

## 75. குரங்கணின் முட்டம்.

சீர்காழிப் பிள்ளையார் பாடல்பெற்ற தலம். கிஷ்கிந்தை வானர அரசனான **வாலியும், அணில், காகமும்** பூசித்தது. **வாலீசுவரர், இறையார் வளையம்மை.** காஞ்சியிலிருந்து தெற்கில் 5 மைல். தூசி மாமண்டூர் சமீபம். பஸ்வழி.

## 76. திருமாகறல்

ஷை க்கு தென்கிழக்கில் 6 மைல் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது. **கடகன்** என்னும் அசுரனுக்கு போரில் ஆற்றுத இந்திரன் பூசிக்க இறைவர் நண்டு வளையினின்றும் பிரசன்னராகி அனுக்ரஹம் செய்த இடம். **அடைக்கலங்காத்தவர், புவனநாயகி.** கோயில் நெற்களமாக உபயோகப்படுத்தப் படுகிறது. பாடல் பெற்றது.

## 77. திருவோத்தூர்.

ஷேடிக்கு தென் மேற்கு 12 மைல் கல்பாதை பஸ் வழி. சம்பந்தர் பாடல் பெற்றது. தேவர் முனிவர், வகை வேதப் பொருளை உணராமல் மயங்கின காலத்தில் இறைவன் ஆசார்ய மூர்த்தமாய் எழுந்தருளி பொருள் உணர்த்தியது. சூரியன், குகப்பெருமான், திருமால் பூசித்தது. முனிவர் சாபத்தால் மானுருவம் பெற்றிருந்த திருமால் சுய உரு பெற்றது. சமணரால் இழிவுபெற்ற அடியார் விருப்பப்படி ஆண்பனை பெண்பனையாக சீர்காழிப்பிள்ளையார் பதிகம் பாடிய இடம். சாணர் சைவரானது. வேதநாயகர். இளமுலைநாயகி. சேயாற்றின்கரை மேல் கோயில் அமைந்திருக்கிறது. தல விருட்சம் பனைமரம் இப்போதும் இக்கலிகாலத்திலும் தெய்வநிந்தனை செய்பவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டும் தலம்.

## 78. பனங்காட்டூர் (வேண்பாக்கம்)

சுந்தரர் பாடல் பெற்றது. காஞ்சிக்கு தென் மேற்கில் 8 மைல். பஸ் வழி பனங்காட்டுநாதர். அமிர்தவல்லி மூவர் போரால் தீர்த்தம் உண்டு. கண்ணுவ முனிவர் பெருமானுக்கு நிவேதிக்க வேறு பொருள் கிடையாது' பனம்பழம் நிவேதித்து பேறுபெற்றது. இக்காலத்தில் அவ்வழக்கம் உண்டு. இரண்டு மூர்த்திகள் உண்டு. பார்க்கவேண்டிய இடம்.

## 79. திரு-ஊறல் (தக்கோலம்)

திருஞான சம்பந்தர் பாடப்பெற்றது. ரயில் நிலையத்திற்கு 3 மைல் வடக்கில் உமாபதி. உமையம்மை லோக மாதாவாகிய உமையம்மை பூசித்தது. நந்திதேவர் வாயிலிருந்து எக்காலத்திலும் நீர் பெருகிக்கொண்டிருக்கும் புராதன கோயில் பெருமைபெற்ற இடம். கோயிலை

கவனிப்பாரில்லை. புராதனக்கோயிலிருக்க புதுக்கோயில் பிரதிஷ்டை செய்கிறார்கள்.

## 80. இலம்பையங்கோட்டூர்.

ஷெ டிக்கு வடகிழக்கில் 7 மைல் கடம்பத்தூரிலிருந்து 6 மைல. சம்பந்தர் பாடியது. சந்திரசேகரர். கோடேந்து முலையம்மை. நகரத்தாரால் சீர்பெறப்படுகிறது.

## 81. திருவிற்கோலம் (கூவம்)

ஷெ டிக்கு வடகிழக்கில் 2 மைல். சம்பந்தர் பாடியது, திரிபுராந்தகர். திரிபுராந்தகி. திரிபுர தகனம்செய்ய தேவர்கள் பூசித்தது. உமாதேவியாரும் பூசித்த தலம். கடம்பத்தூர் ரயில் நிலயத்திலிருந்து 5 மைல். வண்டி வசதி உண்டு.

## 82. திருவாலங்காடு.

ரயிலடிக்கு வடக்கு 3 மைல். மூவர் பாடியது. ஊர்த்ததாண்டவர். வண்டார்குழலியம்மை. இந்திரன், ஆதிசேடன் வகை பூசித்தது பெருமான் நிருத்தவாதம் செய்யவந்த காளியை ஊர்த்துவதாண்டவத்தால் வென்றது. ரத்தின சபை. காரைக்காலம்மை இறவாத இன்ப அன்புவேண்டி இவ்விடத்தில் எக்காலத்திலும் இறைவன் நிருத்த தரிசனம் காண்பது. பழையனூர் நீலிசெய்த வஞ்சனைக்காக வேளாளர்கள் 70 பேர் செட்டியின் பழியை நிலைநிறுத்த தீக்குழிபாய்ந்து சத்தியத்தை நிலைநிறுத்திய இடம். இதுவே எந்நாளும் காக்கும் வேளாளரின் திறம்.

## 83. திருப்பாசூர்.

ஷெ டிக்கு கிழக்கில் 7 மைல். அப்பர், சம்பந்தர் பாடியது. திருவள்ளூர் ரயிலடியிலிருந்து பஸ்வழி

**பாதூர்நாதர். பசுபதி நாயகி.** அங்காரகன், சந்திரன், வியாச முனிவர் பூசித்தது. மெய்யன்போடு பூசித்த சோழ ராசனுக்கு பாம்பாட்டியாக சுவாமி தரிசனம்தந்த ஸ்தலம். மூங்கில் காடாக இருந்த இடம்.

## 84. திருவெண்பாக்கம்.

ஷைக்கு வடக்கில் 3 மைல் **வெண்பாக்கநாதர். கனிவாய் மொழியம்மை.** **சுந்தரர்** கண்வேண்டி பாடியதற்கு **'உளோம்போகீர்'** என்று சொல்லி **ஊன்றுகோல்** கொடுத்த இடம். சதானந்த ரிஷி பூசித்து பேறுபெற்றது.

## 85. திருக்கச்சூர் (ஆலக்கோயில்)

சிங்கப்பெருமாள் கோயில் ரயிலடிக்கு மேற்கில் 1 மைல். சுந்தரர் பாடல் பெற்றது. சுந்தரருக்கு சுவாமி மறையவர் வேடங்கொண்டு யாசித்து உண்பித்தது. வித்யாதரர்கள் பூசித்தது. **விருந்திட்டநாதர். உமையம்மை** தியாகர் நடன தலம். மலையின்மேல் தனிக்கோயில் உண்டு.

## 86. திருஇடைச்சுரம்.

சீர்காழிப் பிள்ளையார் பாடல் பெற்றது. செங்கல்பட்டிலிருந்து வடகிழக்கு 5 மைல் பஸ்வழி. **இடைச்சுரநாதர். இமயமடக்கொடியம்மை.** கவுதமர், சனர்க்குமாரர் பூசித்தது. **மரகத லிங்கம்.** அமைதியுள்ள இடம்.

## 87. திருக்கழுக்குன்றம் (வேதகிரி)

நால்வரும் பாடியது. செங்கல்பட்டுக்கு கிழக்கு 9 மைல். பஸ்வசதி உண்டு. மலைமேல் **வேதகிரீஸ்வரர். திரிபுரசுந்தரி.** கீழே **பக்தவத்சலர், பெண்ணினல்லாளம்மை சொக்கம்மை.** நான்கு வேதங்கள் மலை உருவாக பெருமான் உச்சியில் அமர்ந்திருக்கும் ஸ்தலம். அஷ்டவசுக்கள்,

கோடிருத்திரர், நந்திதேவர், இந்திரன், திருமால் முதலியவர்களும், கழுகுகளும் பூசித்தது. இக்கலியுகத்தில் கழுகுருவம்பெற்ற பூடா. விருந்தா எனும் முனிவர் பூசித்து வருகிறார்கள். கிரி வலம் சுகம்தரும். மகப்பேறு சித்திக்கும், மருந்தினால் தீராத நோய்கள் ஒரு மண்டலம் மலை சுற்றுதலினால் தீரும்.

## 88. திருவலம்.

வில்வாரண்ய க்ஷேத்ரம். ரயிலுக்கு வடகிழக்கு 2-மைல். வில்வ விருட்சம் பாலாறு. வல்லநாதேஸ்வரர் வல்லாம்பிகை. சம்பந்தர் பாடியது. கிழக்கு பார்த்த நந்தி.

## 89. வள்ளிமலை.

ஷெடிக்கு வடமேற்கில் 8-மைல் சுப்ரமணியர் வள்ளியை மணம் புரிந்த இடம் பிரபலமுள்ள தலம் மலைமேல். பஸ்வழி.

## 90. திருவொற்றியூர்.

ரயிலுக்கு கிழக்கு கால் மைல் பிரம்ம, கடல் தீர்த்தம். மகிழ், அத்திவிருட்சம். பிரம்மா, ரோமசர்மர், வான்மீகி, வாசுகி, நந்தி பூசித்தது. மாணிக்க தியாகர். படம்பக்கநாதர். ஆதிபுரீசுரர். வடிவுடையம்மை. திரிபுரசுந்தரி. மூவர் பாடியது. கலிய நாயனார் அவதாரம். பட்டினத்தார் முத்தி. சுந்தரர் சங்கிலியாரை மணந்தது. அகத்தியருக்கு கல்யாண காட்சி கொடுத்தது,

**சிவஸ்தலங்கள் முற்றிற்று.**

அன்பே கடவுள். கடவுளை மறவாதீர்.

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீ காஞ்சி விஷ்ணுதல விவரச் சுருக்கம்.

## 1. ஸ்ரீ வைகுண்டப்பெருமாள்.

(**பரமேச்வர விண்ணகரம்**) பெரிய காஞ்சீபுரம் வைகுண்டபெருமாள் கோயில் தெருவில் கீழ்க்கோடியில் உள்ளது. ரயிலிலிருந்து 2 பர்லாங்கு. அயிரமதீர்த்தம். பல்லவராயனுக்கு பிரத்யக்ஷம். பரமபதநாதன் வைகுந்த வல்லி. திருமங்கை ஆழ்வார், மங்களாசாஸனம். பரமேஸ்வர வர்மன் கட்டியது. பௌத்த மதக்கொள்கை, சிற்ப சாஸ்திரங்கள் திறமையாக அமைக்கப்பெற்றுள்ளது. மேல் மாடியில் **ரங்கநாதர்** சயனம். வௌவால் குடிக்கொண்டிருக்கிறது. அதிகாரிகள் மேல்பார்வை வேண்டும்.

## 2. பவழவண்ணப்பெருமாள்.

ஷை கோயில் பெயர் உள்ள தெருவில், கீழ்க்கோடியில் உள்ளது. பிரம்மயாக காலத்தில் சரஸ்வதியால் ஏவிய அசுரரை உதிரபானம் செய்ததினால் செந்நிற மடைந்தது. **பவளவல்லி நாச்சியார்.** சக்கர தீர்த்தம். அசுவனி தேவர் முதலியவர்கட்கு பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். ரயிலிலிருந்து வடமேற்கு ¾ மைல். தீர்த்தம் நிறமடைந்திருக்கிறது.

## 3. பச்சைவண்ணப்பெருமாள்.

ஷைக்கு மேற்கில் 1 பர்லாங்கு. மரகதவல்லித் தாயார். பிருகு முனிக்கு பிரத்யக்ஷம். கம்மாளத்தெருவில்

## 4. நிலாத்திங்கள்துண்டப்பெருமாள்.

ஷைக்கு மேற்கில் 2 பர்லாங்கில் **பெரிய கோயிலின்** உள் ஏகம்பம் உள் ஆவரணத்தில் உள்ளது. மேற்கு நின்ற கோலம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

### 5. பாடகம்-பாண்டவபெருமாள்.

ஷை க்கு தெற்கில் 2 பர்லாங்கு பாண்டவபெருமாள் கோயில் தெருவில் மேல் கோடியில், பாண்டவதூதர் ருக்மிணி, சத்யபாமை. மத்ஸ்ய தீர்த்தம். திருமழிசை, திருமங்கை, பூதம், பேயாழ்வார் மங்களா சாஸனம். மாட்டுக்தொழுவமுமுண்டு. அர்ச்சகர்களின் அதிக்ரமம்.

### 6. பேரகம். உலகளந்தப்பெருமாள்கோயில்.

உலகளந்த பெருமாள் (திரிவிக்ரமன்) அமுதவல்லி நாச்சியார். மேற்குபார்த்த சந்நிதி. நின்ற திருக்கோலம். ஆதிசேஷனுக்கு பிரத்யக்ஷம். திருமழிசை, திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். பெரிய காஞ்சீபுரம் பெட்டை மண்டபம் சமீபம். நாகதீர்த்தம். ஸார, ஸ்ரீகர விமானம் ரயிலுக்கு மேற்கு ½-மைல்.

### 7. திருவூரகம்.

ஷை உலகளந்தார் கோயில் உள், வடக்கில். திருமால் உரகரூபியாய் சேவைசாதிக்கும் திருப்பதி.

### 8. திருநீரகம்.

ஷை கோயிலில் ஜெகதீசபெருமாள். நிலமங்கைவல்லி அக்ரூர தீர்த்தம். திருமங்கை, பூதம், திருமழிசை ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

### 9. திருக்காரகம்.

ஷை கோயிலில் கருணாகரப்பெருமாள். பத்மாமணி நாச்சியார். கார்கரிஷிக்கு பிரத்யட்சம். திருமங்கை ஆழ்வார் மங்களாசாஸனம்.

### 10. திருக்கார்வானம்.

ஷை கோயிலில் கள்வர், கமலவல்லி நாச்சியார். வடக்கு பார்த்த சன்னதி. திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

## 11. திருக்கள்வனூர்.

ஷை க்கு மேற்கில் 1-பர்லாங்கில் காமாக்ஷி அம்மன் கோயில் உள் ஆவரணத்தில் தென்பக்கம் உள்ளது. **ஆதிவராகப் பெருமான். அஞ்சிலை நாச்சியார்.** திருமங்கை ஆழ்வார் மங்களாசாஸனம். அஸ்வத்த நாராயணருக்கு பிரத்யட்சம்.

## 12. அட்டபுயகரம்.

சின்ன காஞ்சிபுரம் தோடி சமீபம். **ஆதிகேசவப்பெருமான், சக்ரதரன், அலர்மேல் மங்கை.** கஜேந்திர புஷ்கரணி. திருமங்கை, பேயாழ்வார் மங்களாசாஸனம். **அஷ்டபுஜர்** என்று வழங்குகிறது. காளியோடு போர் செய்த இடம். பிரம்மாவும் யாகம் செய்த இடம். ரயிலுக்கு தெற்கில் $1\frac{3}{4}$-மைல்.

## 13. திருவெஃகா.

**(எதோத்காரி.)** ஷைக்கு சமீபம் வடக்கில், **சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள், கோமளவல்லி நாச்சியார்.** பொய்கை புஷ்கரணி. கணிகண்ணருக்கும், பிரம்மாவுக்கும் பிரத்யட்சம். **பொய்கை ஆழ்வார்** அவதார தலம் பொய்கை, பேய், திருமங்கை, திருமழிசை, நம்மாழ்வார் மங்ளாசாசனம். பிரம்மா செய்த வேள்வியை அழிக்க சரஸ்வதி வேகவதி நதியாக வந்ததை தடுத்தற்பொருட்டு, பிரம்மா வேண்டியபடி மாயவன் நிர்வாணமாக பள்ளி கொண்ட இடம். **வேகாசேது** என்று பெயர்.

## 14. திருத்தண்கா.

**(விளக்கொளி கோயில்.)** ஷைக்கு மேற்கே இரண்டு பர்லாங்கில் **மரகத வல்லித்தாயார்,** சரஸ்வதிக்கு பிரத்யட்சம். திருமங்கை ஆழ்வார் மங்களா சாஸனம். **ஸ்ரீ வேதாந்தாச்சாரியார்** அவதார தலம். முன் மாயாநலன்

என்பவனை தீபம்போல் கையில் வைத்திருந்தவர் என்றும் சரஸ்வதி அக்கினியாக வந்த போது தான் தடுத்ததாகவும் கதை. காஞ்சி புராணத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

## 15. வேளுக்கை.

**முகுந்தநாயகர் (சந்நிதி)** கடிக்கு தெற்கே 1 பர்லாங்கில் **அழகியசிங்கர். வேளுக்கைவல்லி.** கனகஸரஸ். பிருகு ரிஷிக்கு பிரத்யக்ஷம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

## 16. வேளுக்கை சிங்கப்பெருமாள்கோயில்.

கடிக்கு தெற்கில் 1-பர்லாங்கில் **அழகியசிங்கர். அமிர்தவல்லித்தாயார்.** திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம். ஸிம்மதீர்த்தம். தற்காலம் குளத்தில் விக்ரகங்களும் கோயிலும் மறைக்கப்பட்டிருக்கிறது. **வித்தியா குண்டம்** என்றும் சொல்வதுண்டு. கலிகாலம்.

## 17. அத்திகிரி. திருக்கச்சி

(விஷ்ணுகஞ்சி) கீழ்கோடியில். **வரதராஜர்** சந்நிதி **அத்திவரதர்** (ஆதிவரதர்) அனந்த ஸரஸில், அனந்தாழ்வாரால் ஜலத்தில் பூஜிக்கப்படுகிறது. 40 வருஷங்களுக்கு ஒருமுறை வெளியே கொண்டுவரப்பட்டு ஒருமண்டலம் வெளியே பூஜிக்கப்பெற்று **காசு கொடுத்தவர்களுக்கு மட்டும் சேவை செய்து வைக்கப்படும். பேரருளாளப்பெருமாள் பெருந்தேவித்தாயார்.** அனந்தசரஸ, வேகவதி, சேடி வராக, அக்கினி, பத்ம தீர்த்தங்கள். பிரம்மா பூஜித்தது. பிரம்மா, திருவனந்தாழ்வார், கஜேந்திரர், நாரதருக்கு பிரத்யட்சம். திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் மங்களாசாஸனம் செய்ததாக சொல்லப்படுகிறது. புண்ய கோட்டி விமானம். **சத்யவிரத** க்ஷேத்ரம். கஜேந்திராழ்வார் பூஜித்து முதலையின் துன்பந் தீர்ந்ததும், தெய்வதச்சனாகிய மயன், பிரமன் ஆக்ஞையால் கோயில் கட்டியதாக

வும் இந்திரன் சாபத்தால் ஐராவதம் மலைவடிவங்கொண்டு தவஞ்செய்து எப்பெருமானை தரித்ததால் அஸ்தகிரி எனப் பெயர். கோயிலின் நூற்றுக்கால மண்டபத்தில் புராண சம்பந்தமான விஷ்ணு அவதார மகிமைகள் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. ஒரே கல்லில் மூலைகளின் உச்சியில் சங்கிலித் தொடர்களையும் சிற்பியின் வேலைப் பாட்டையும் திருப்பெருந்துறையில் உள்ளதைப்போல் காணலாம். பிரம்மா அஸ்வமேத யாகம் செய்து சரஸ்வதி கவர்ந்த சிருஷ்டி தண்டத்தை பெற்ற இடம் பிரதி வைகாசி மீ 10 தினங்கள் இதற்காக பிரமோத்ஸவம் நடைபெறு கிறது. வைகாச பௌர்ணமியன்று கருடசேவை. தாதாச் சாரி ப்ரம்பரையார் கோயில் வழிபாடு செய்பவர்கள், வட கலை சந்நிதி. நின்றகோலம். சுவாமியின் சொத்தை கொள்ளை கொள்ளும் கொடியவர் உண்டு.

## 18. குகாநரசிம்மர். அழகிய சிங்கப்பெருமாள் அரித்ராதேவித் தாயார்.

ஷை ஆலயத்தில் உள்பிரகார நுழைவு எதிரில்; மேற்கு பார்த்தசந்நிதி, இந்திரனுடைய கஜ உருசாபத்தை இரண்டு பிளவாய் பிளந்து அனுக்கிரகித்த இடம். யோகாஸ னரூடர். கபாலி என்பவனைக்கொன்று அவன் எய்தின அஸ்திரங்களை பானம் செய்தவர். **மலைமேல் (மேல் பிர காரத்தில்) இரண்டு பல்லிகள். சிருங்கி பேர** முனிவருடைய புதல்வர்கள், கௌதம முனிவருக்கு பூஜைக்கு தீர்த்தம் கொணர்ந்ததில் பல்லி இருந்ததால் பூஜைக்கு தடங்கலாய் விட்டபடியால் பல்லிகளாக சாபம் கொடுத்ததை இந்திரன் யானையுரு தும்பிக்கையால் மரத்தின்கிளை முறியும் காலத் தில், சாபம் நீங்கின இடம். இந்த சிலை உருவத்தை தரிசித்தவர்கள் ஹரிநாம சங்கீர்த்தன பலனடைவர். பெருமாளுக்கு **ஸ்ரீ பூதேவியார் புஷ்பகைங்கர்யம் செய்தும்,**

ஸ்ரீ. மஹாலக்ஷ்மி விற்றிருந்து விவாகம் செய்துக் கொண்ட இடம். மலைமேல் செல்ல 24 படிகள், தேவசிற்பியால் அமைக்கப்பட்டன. **அனந்த தீர்த்தம். சனி வார ஸ்னான விசேஷம்.** பரத்துவாஜகுலத்துதித்த கணு என்னும் வேதியன் செய்த கொலைப்பாதகம், அத்திகிரிதரிசன விசேஷத்தால் நீங்கப்பெற்று மோட்ச மடைந்தான்.

சிந்து தேசவாசி **காக்கிரீ** என்பவர் பார்ப்பன ஒழுக்கத்தை விட்டு பலதியவழக்கங்களை அனுசரித்து யாத்திரைவாசி ஒருவருக்கு நெல்லிக்கனி கொடுத்து தாகவிடாய் தீர்த்த பலனால் பலவித பாபங்களினின்று விடுபட்டு விஷ்ணு லோகத்தை அடைந்தார். ஆகையால் இந்த இடத்தில் ஒரு இரவு தங்கினாலும், தெரிசித்தாலும் மிக்கபலன் தரும். கோயில்களின் சுற்றுப்பிரகார சித்திரங்களை கூர்ந்து பார்த்தால் அவதார மகிமைகள் விளங்கும். கோயில் அதிகாரிகள் பொது ஜனசேவைக்கு **அர்ச்சகரால்** எற்படும் **ஊறுகளை** நிவர்த்தித்து சுலபமாக **நல்ல தீபம்** ஒன்றுவது **திரிவிக்ரம பெருமாள் தெரிய** எற்றச்செய்து, தெரிசிக்க எற்பாடு சேய்யவேண்டும். மேல் அதிகாரிகளும் கவனித்தல் நன்மையைத் தரும்.

## 19. திருப்புட்குழி.

விஜயராகவப் பெருமாள். மரகதவல்லி நாச்சியார் விஜய கோடி விமானம். சடாயு தீர்த்தம். திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம். (சடாயு பூசித்த ஸ்தலம்.) காஞ்சிபுரத்திற்கு 5-மைல் மேற்கே உள்ளது. அமாவாசை தினம் தீர்த்த, தெரிசன விசேஷம், பிரபலமானது. தொண்டை நாட்டு ஸ்தலங்களில் ஒன்று. ஆற்காடு பஸ்வழி

செல்வம் நிலையல்ல ! கடவுளை மறவாதீர் !!

முற்றிற்று.

# ஆலய தெரிசன விதி.

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணியிரங்கவு நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.
*தாயுமானவர்.*

வேடநெறி நில்லார் வேடம் பூண்டென்பயன்
வேடநெறி நிற்போர் வேடம் மெய்வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விரல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே.— *திருமந்திரம்.*

1. *ஆலயம் கடவுளின் சொரூபம் அமைந்த இடம். கடவுள் ஒருவரே. ஆன்மாவை லயம் செய்யக்கூடிய இடம். அவரவர் வழிபாட்டிற்கிணங்க அருள்கிடைக்கும். ஆலயம் செல்வதற்கு முன் மன சுத்தத்துடன் கை கால்கள் சுத்திசெய்து உலர்ந்த வஸ்திர முடுத்தி மத சின்னம் அணிந்து பூசை சாமான்களுடன் ஆலயம் செல்லவேண்டும்.*

2. *உள் புகுமுன் வெளியிலுள்ள துஜஸ்தம்பத்தின் சமீபம் வணங்கி ஆணவமலத்தை நீக்கி செல்லவேண்டும், வணங்குவதில் பலவகை உண்டு. முக்கியமாய் ஆண்களுக்கு அஷ்டாங்கமும் பெண்களுக்கு பஞ்சாங்கமும் விதி.*

3. *வலம் வருவதற்குமுன் கோயில் முன் உள்ள காப்புத்தேவரை வணங்கி விடைபெற்று பிரதட்சணம் குறைந்தது மூன்று முறையாவது செய்யவேண்டும். பின், பிரகாரங்களில் உள்ள மூர்த்திகளை வணங்கியபின் அந்தந்த தேவர்களுக்கு ஏற்படுத்திய ஒன்று முதல் 21 முறை வரை*

வலம் செய்யவேண்டும். பின் முழுமுதற் கடவுளை வணங்கி, அர்ச்சனை முதலியது செய்து, சமயதோத்திரப் பாக்களை கசிந்து பாடவேண்டும். அவசரமாக வலம் வருதல் கூடாது. திரும்பு காலையிலும் துவஜஸ்தம்பத் தண்டை முன்போல் வணங்கி அங்கிருந்து அவரவர்க் குண்டான மந்திரத்தை இயன்ற வரையில் மானசிகமாய் செபம் செய்து திரும்பவேண்டும்.

4. ஆலயத்துள் எவ்வித அசுத்தமும் செய்யக் கூடாது. செய்பவர்களையும் எச்சரிக்கை செய்யவேண்டும். கூடுமானுல் புண்ணியச் செயலாகிய உழவாரப்பணி முதலிய சரியை கிரியைகள் செய்ய முயலவேண்டும்.

5. ஆலயத்தில் உள்ள பலிபீடம் முதலிய உருவங் களின் தத்துவங்கள் அளவுகடந்தன. ஆலயத்துக்கு தினந்தோறும் சென்று வழிபாடு செய்யவேண்டும். இயலாவிடில் திங்கள், வெள்ளி, சனிக்கிழமைகளிலும், அமாவாசை பௌர்ணிமை, கிருத்திகை, ஏகாதசி, பிர தோஷம் முதலிய நாட்கள் முக்கியம்.

6. **இன்றியமையாதது.** 1. பொய் சொல்லாமை. 2. கொல்லாமை. 3. கள் குடியாமை. 4. புலால் விரும் பாமை. 5. அக்கிரம காமம் அடையாமை. பிற சமயங் களைத் தூஷியாமை. தம் சமயத்தில் அழுத்தம். பிற உயிர்களிடத்தில் இரக்கம். மீண்டும் பிறவாமலிருக்க முயற்சித்தல். தெய்வம் உண்டென்னும் எண்ணம். அத் தெய்வம் ஒன்றென்பது. அதற்கு உருவம், பெயர், தொழில் முதலியன இல்லை. நம்மை உய்விக்க பல வடி வம், பெயர், தொழில் மேற்கொண்டுள்ளது. குரு, அடி யார் பக்தி, சாத்திர ஆராய்ச்சி, உழைக்கும் காலம் நீங்க மற்ற காலத்தில் மனம் வாக்குக்காயங்களைக் கடவுளிடத்

தில் செலுத்தல். அன்பே சிவம். (கடவுள்) செல்வம் நிலையல்ல. கடவுளை மறவாதீர் !

திருச்சிற்றம்பலம்.

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி.

---

உ
சிவமயம்.

# ஆலய ஊழியர்களின் அறிவிப்பு.

## ஆலய பார்வையாளர்களும், சேவார்த்திகளும் கவனிக்கவேண்டிய பிரதம கோரிக்கை.

1. கோயில்களில் ஏற்பட்ட நித்திய கட்டளைப்படி காலத்தில் திருமுழுக்குக்குப் பின் வஸ்திர முடுத்தி பூசை வகை சரிவர ஆசாரத்துடன் செய்யவேண்டும். லாகிரிப் பொருள் போடும் **சுயம்பாகிகளை** அனுமதித்தல் கூடாது.

2. தீர்த்தங்களில் அழுக்குத்துணி துவைத்தல் முதலிய அசுத்தங்கள் செய்யாது காப்பாற்றவேண்டும். தாம்பூல எச்சிலுடையவரை கோயிலுள் விடக்கூடாது.

3. அர்ச்சகர் வகை அவர் வேலையாக இருக்கும் போது கோயில் வெளி **கதவுகள் பூட்டாமல்** திரையை நீக்கி கம்பிக் கதவுகளை பூட்டிவைத்தால் பொதுமக்கள் சேவை செய்யமுடியும். அதிகாரிகள் கவனிக்கவும்.

4. பல மண்டபங்கள் பாழடைந்து இருக்க அதை சுத்தம் செய்து உபயோகிக்காது பல நூற்றுக்கணக்

கான பணம செலவு செய்து உத்ஸவகாலத்தில் சில தின உபயோகத்திற்கு கொட்டகைபோட்டு நெருப்பு வகைக்கு ஏன் இறையாக்கவேண்டும்.

5. புகழுக்காக லட்சதீபமும் பல அலங்கார விளக்குகளும் ஒரு நாளில் போட்டு மறுநாள் இருள் அடையாமல், மக்களை அனல் வாதையால் அவதிக்குள்ளாக்காமல் தினப் பாலை காலத்தில் சரிவர சுவாமி தெரிய தீபம் ஏற்றச்செய்வது புண்ணியச்செய்கை.

6. நல்ல ஓதுவார்களை உணர்ச்சியுடன் ஓதச்செய்ய வேண்டும். நகரத்து செட்டிமார்கள் பல இடத்தில் அதிக செலவு செய்து தேவார பாடசாலைகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் வரும்போதுதான் அவை பிரகாசிக்கின்றன. மேல் பார்வையும் கவனிப்பும் வேண்டும்.

7. பிரம்மோற்சவ காலத்தில் மக்கள் சுவாமியை தெரிசிக்க பட்டரையின்மேல் வெளிச்சமிருக்கவும், சாத்விக கோடிக்காரர்களைக் கொண்டு அமைதியாக போகவும், பூசா காலத்தில் சகலரும் தெரிசிக்க ஏற்பாடு செய்தலும் வழிபாட்டில் தர்மகர்த்தர் இருக்கவும் வேண்டும். மயிலை, திருக்கழுக்குன்றம் கோயிலை பின்பற்றுக. உற்சவகாலத்தில் சுவாமி புறப்பாடாக கோடிக்காரர்களால் தடங்கல் நேரிடுவதை தவிர்க்க. தெருவடிச்சான் (மரசப்பரம்) வேண்டியது அவசியம். திருவருணையைப் போல் செய்து மகிமைப்பணத்தை மக்கவைக்காமல் கண்கள் கண்டு களிக்கச் செய்வது நன்மை.

8. பல்லாயிர மக்கள் பட்டினியினால் மடியும் இக்காலத்தில் பட்டரை வெடி, பாணம் வகைக்கு பணத்தை கரியாக்காமல் சுவாமி புறப்படும் போதும் சேரும்போ

தும் அறிக்கை வெடி போடச் செய்யவேண்டும். உபயக்காரர்களும் தரும நெறி உள்ளவர்களும் கவனிக்கவும்.

9. மாஜி மந்திரி **டாக்டர் ராஜன்** 28—7—38ல் தூத்துக்குடியில் பொதுவாக கோயில்களில் பல விஷக்கிருமிகள் குடியிருப்பதாகவும், விளக்கேற்றுவது மருந்தாகவே உள்ளதென்றும், **தர்மகர்த்தர்களின் தொந்தி தொப்புளிலிருந்து தான் கடவுளைக் காணவேண்டுமென்று அறிவித்துள்ளார்.** இது மிகவும் கவனிக்கத்தக்கது. கருத்துடன் கவனிக்காதவர்கள் போட்டி போட்டு பணத்தை வீணாக்கி பட்டம் பெற வராமல் இருப்பது மேல்.

10. **சமயம் அழிகிறதென்று** வாய்ப்பறை அடிப்பதை விட்டு **மேல் நாட்டார்** தம்மதத்தை நிலை நிறுத்த செய்யும் பிரசாரத்தைப்போல் நம் தனிகர், பொது நல புலவர், புராணிகர் வகை உண்மையோடு **மெய் சங்கங்கள், தேவார பாடசாலைகள்,** ஊக்கமுள்ள பிரசாரங்கள் மூலம் மக்களுக்கு அறிவித்து அவர்களை பிற மததில் விழாமல் பாதுகாக்கவேண்டும். சமயத்திற்காக மக்களிடம் பணம் பறித்து **சொந்த சிலவை** கவனிப்பவர் விலக்கப்படவேண்டும். **கழக உபந்யாசங்கள் காலத்தின்படி ஆரம்பித்து மக்களுக்கு வேண்டாத முன்பின் திருப்பிச் சொல்வது, பிடிகைகள்** தற்புகழ்ச்சி இல்லாது, அரங்க மத்தியில் இருந்து **ஊமைச்சொல்லால்** உணர்த்தாமல் சகலருக்கும் கேழ்க்கும் தொனியால் சொல்லி **காலத்தின்படி** (ஒரு உபந்யாசத்திற்கு ஒருமணி) முடிப்பது நன்மை. **இது தலைவர் கவனிக்கவேண்டும்.**

11. வார, பட்ச, மாத உத்சவங்களை மக்கள் உறங்கிக்கிடக்கும் அகாலத்தில் செய்யாமல் காலத்தில் செய்ய முயல வேண்டும். சில கோயில்களில் **தர்மகர்த்தர்கள்**

உள்ளே போகவும் கூட காசு வசூல் செய்யும் வழக்கத்தை நாஸ்திக மதம் பரவும் இக்காலத்தில் கைவிடவேண்டும். கோயில் பொதுவானது. சமயாசாரியர்கள், ஆழ்வாராதிகள்; நாயன்மார்கள் மற்றும் பேரறிஞர்களும் சமயத்திற்காக உழைத்த உழைப்பு நாடறிந்ததே. ஆதலால் சமயத்தை நாம் காக்க முன்னிற்கவேண்டும்.

### காஞ்சியின் பெருமை

எங்கணும் நிறைந்து நிற்கும் எம்பிராற்கினியவாய
பங்கமில் வரைப்பு மண்மேல் பல உள அவற்றுட் காசி
அங்கதில் காஞ்சி மேலாம் காஞ்சியின் அதிகம் இல்லை
செங்கதிர் மதியஞ் செந்தீ மண்டிலம் அடியர் உள்ளம்.

### காஞ்சியின் பன்னிரு பெயர் மாட்சி.

புவன சாரம் மும்மூர்த்தி வாசம் விண்டுபுரம் காஞ்சி
தலமார் கலிசித்திலயசித்து சகலசித்தி தபோமய ஊர்
கலிஞர் பிரமபுரம் ஆதிபீடம் கன்னிகாப்பு வினைப்
பவநோய் அறுக்கும் சிவபுரமாப் பன்னிரண்டு திருப்பெயர்த்தாள்.

அடியா ரவரே அடியாரலாதார்
அடியாரு மாகாரவ் வேடமுமாகார்
அடியார் சிவஞான மானதுபெற்றோர்
அடியா ரலாதார் அடியார்கள் அன்றே

திருமந்திரம்—

வையம் நீடுக ! மாமழை மன்னுக !!

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சபுராணம் (பாராயணத்திற்கு)

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

—தேவாரம்

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ

—திருவாசகம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத் திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந் தனவே

—திருவிசைப்பா

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே பல்லாண்டு கூறுதுமே

—திருப்பல்லாண்டு

நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி நிரந்த ரம்திரு வாக்கினில் நிகழ்வ.
தஞ்செ ழுத்துமே யாகஆளுடைய அம்மை செமமலர்க் கைகுவித் தருளி
தஞ்ச மாகிய அருந்தவம் புரியத் தரிப்பரே அவள் தனிப்பெருங் கணவர்
வஞ்ச நீக்கிய மாவின் மூலத்து வந்து தோன்றினர் மலைமகள் காண

திருச்சிற்றம்பலம். பெரியபுராணம்.

ஸ்ரீ வெங்கடேஸ்வர பிரஸ், சின்ன காஞ்சிபுரம். C. 1000.

# பலி இடாதீர்கள்

உயிர்ப்பலியை ஒழியுங்கள்




கொல்லாவிரதம் குவலயமெங்கும் ஓங்க.

க. வெ. அ. 92, காமாட்சி தெரு, பெரிய காஞ்சீபுரம்.

சிவமயம்.

# பலி இடாதீர்கள்.

## உயிர்ப்பலியை ஒழியுங்கள்

## நோன்பென்பது கொன்று தின்னாமை.

"கொல்லா விரதம் கொண்டவரே நல்லோர்
மற்று அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

ஜீவன்களின் துன்பத்தை நீக்குவதே ஜீவகாருண்யம். 32 தர்மங்களில் அன்னதானமே சிறந்தது. நாம் நோய் படின், மருந்து சாப்பிடாமல் பூசாரிகள் பிழைக்க, அம்மன் ஆடு, கோழி புசிப்பதாக எண்ணி பிரார்த்தனை செய்து ஏமாறாதீர்கள். பரிசுத்தமே கடவுளின் தன்மை. கோயிலைக் கொலைக்களமாக்காதீர்கள். அன்பே நபது பதம். கொலை யால் குடும்பம் அழியும். தொழுநோய் உண்டாகும். கடவுளுக்கு எடுத்துப்போகும் பழம் வகைகளையே, படைத்தபின் அதை வேண்டுபவருக்கு கொடுப்பதில்லை. கடவுள் முன் பலியிட எடுத்துச்செல்லும் பிராணியை சக்தியுள்ள உயிர் விரும்பும் தேய்வம் தானே உயிரை வாங்கிக்கொள்ளட்டும். கோயிலை சுற்றிவந்து விட்டு விடுவதே முறை. பாற் பொங்கலிடுங்கள். மிருகங்களும் நமக்கு தொண்டு செய்கின்றன. வேலை வாங்கின பின் பட்டினி போடாதீர்கள். பலியிடுதலை நாம் முயற்சி செய்து நிறுத்தவேண்டும்.

அ. பொன்னம்பலம்,
கணபதி வாசகசாலை, காஞ்சீபுரம்.

## கணபதி வாசக சாலை,

92, காமாட்சி அம்மன் தெரு, காஞ்சிபுரம்.

ஆலய வழிகாட்டி (இந்தியாவிலுள்ள பாடல்பெற்றவும் பிரபலகோயில்களும்) விலை ரூ. 1.
தொண்டைநாட்டுத் தேவாரம் (32 தலங்கள்) அ. 12.
அற்புதத் தேவாரம். நால்வர் சரித்திரம் அ. 6.
காஞ்சிபுரம் ஆலய விளக்கம் அ. 3.
திருவாசகம். அ. 6.
திருக்குறள் (குமரன் பதிப்பு) அ. 4.
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி (உரையுடன்) அ. 2.

மற்றும் தமிழ் வெளியீடுகள், தர்மபுர ஆதீனம், சென்னை சைவசித்தாந்த கழக, சமாஜ புத்தகங்கள் கிடைக்கும். இதர வெளியீடுகளும் வரவழைத்து கொடுக்கப்படும்.

A. சண்முகம், 21, முத்துகாளத்தி செட்டித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.


## மெய்கண்டார்கழகம், காஞ்சீபுரம்.

காஞ்சிப்புராணம் வாரயாத்திரை (5-வது) வழிபாடு பிரதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு நடைபெறுகிறது. மாலை 6-மணிக்கு ஸ்ரீ கச்சபேசுரர் கோயிலில் உபந்யாசம்.

## திருமாலடியார் திருமன்றம்.

பிரதி அமாவாசையில் மாலை 5-மணிக்கு உலகளந்தார் கோயிலில் பிரபல உபந்யாசம் உண்டு.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

பெரிய காஞ்சிபுரம், கச்சேரி தெரு வடகோடியில் பொது இலவச வாசகசாலை உண்டு. காலை 7—10 மாலை 5—7 மணி வரை. திங்கள் தவிர, ஞாயிற்றுக்கிழமையில் மாலை 6-மணிக்கு சொற்பொழிவு.

## திருவள்ளுவர் செந்தமிழ் கழகம்.

காந்திரோட் சவுளிக்கடை சத்திரத்தில் பிரதி சனிக்கிழமை மாலை 6-மணிக்கு திருக்குறள் உபந்யாசம் நடைபெறும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி,
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

க. வே. அ. காஞ்சிபுரம். 12—6—